Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மங்கள நிகழ்வுகளுக்கு மங்களகரமான ஸ்தாபனம்
முற்றிலும் நவீனமயப்படுத்தி, குளிரூட்டப்பட்ட காட்சியறை

குமரகுருபுடவை அழகுப்பொருள் வாணிபம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆனி- 09 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஜ-அவ்வல் 15 (23.06.2005) வியாழக்கிழமை இதழ்:267

## பொதுக்கட்டமைப்பு உருவாக்கம் தொடர்பாக

# ஜனாதிபதியின் விசேட செய்தி எதையும் நோர்வே தரப்பு கொண்டுவரவில்லை!

## நேற்றைய சந்திப்பும் வழமையானதே என்கிறார் சு.ப.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி

பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப் படுவது தொடர்பான திகதி எதையும் குறிப்பிடாமல் வழமைபோன்று பொதுக் கட்டமைப்புக்கான உடன் படிக்கை விரைவில் கைச்சாத்திடப்படும் என்றே ஜனா திபதி வாக்குறுதியளித்துள்ளதாக நோர்வேத் தரப் பினர் கூறிச்சென்றுள்ளனர்.


எனவே, ஜனாதிபதியின் வாக்குறுதிகள் மட்டும் தான் வெளிப்பட்டுக்கொண்டிருக்கின்றதே தவிர பொதுக்கட்டமைப்பு உருவாக்கம் தொடர்பாக ஆக்க பூர்வமான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்பட வில்லை. நேற்றைய சந்திப்பும் வழமைபோன்றே அமைந்ததாக தமிழீழ அரசியற்துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறை நடுவப்பணியத்தில் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தலைமையிலான குழுவினருடன் இடம்பெற்ற சந் திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னதாக நேற்றுக்காலை 9.30 மணியளவில் இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான ஹெலி கொப்டரில் வருகைதந்த நோர்வே பிரதிவெளிவிவ கார அமைச்சர் விதார் (12 ஆம் பக்கம் பார்க்க)



## பொதுக்கட்டமைப்பு விடயத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாம்!



### ஹெல்கிஸன் தெரிவிப்பு

கிளிநொச்சி

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் முன்னேற்றம் ஏற் பட்டுள்ளது. இதனால் எமது பணியை செய்து முடிப் போம், என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரி வித்தார்.

நேற்றுகிளிநொச்சியில் அரசியற்துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழு வினரைச் சந்தித்த பின்னர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக சுதந்திரக் கட்சிக்குள் முரண்பாடு!

கொழும்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட் பாளராக அனுரா பண்டாரநாயக்கவை நிய மிக்க ஜனாதிபதி தயாராகி வருவதாக ஜனாதிபதி செயலக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து ஜனாதிபதி ஏற்கனவே சிரேஷ்ட அமைச்சர்கள் சிலருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருப்பதாகவும் அந்தத் தகவல்கள் கூறு கின்றன.

எனினும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்க வேண்டும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஜனாதிபதியைக் கேட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

அனுர பண்டாரநாயக்கவை ஜனாதிபதி வேட் பாளராக நியமித்தால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி யினுள் கருத்துபேதங்கள் ஏற்படலாம் என சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப் பினர் ஒருவர் தெரிவித்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருக்கும் ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்களும் பிரத மரை அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக நியமிப் (12 ஆம் பக்கம் பார்க்க)

வினரைச் சந்தித்த பின்னர் (12 ஆம் பக்கம் பார்க்க)

அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்க

# திருகோணமலை - மூதூரில் ஹர்த்தாலை குழப்ப முயன்றதால் பதற்றநிலை; ஊரடங்கு அமுல்!

திருகோணமலை

திருகோணமலை மாவட்டம் மூதூரிலிருந்து 20 கிலோமீற்றர் தொலைவிலுள்ள மேன்காமம் பகுதியில் தமிழ் மக்களால் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டவேளை அதனைக் குழப்புவதற்கு சிங்களக் காடையர்கள் மேற்கொண்ட முயற்சியால் அங்கு வன்முறை மூண்டுள்ளது. இதனால் மூன்று சிங்களக் காடையர்கள் காயமடைந்தனர். இதனையடுத்து அந்தப் பகுதியில் (12 ஆம் பக்கம் பார்க்க)



# பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தக்கோரி நோர்வே தூதரிடம் மகஜர் கையளிப்பு!

கிளிநொச்சி

அரசாங்கம் தமிழ் மக்களை ஏமாற்றுவதை உடன் நிறுத்தி, பொதுக்கட்டமைப்பில் உடன் கைச்சாத்திடவேண்டும் என்ற கோரிக்கையடங்கிய மகஜரை இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரிடம் வடக்கு - கிழக்கு மாகாண கடற்தொழிலாளர்கள் சார்பாக யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் சங்க சம்மேளனம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளது.

நேற்று கிளிநொச்சியில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நோர்வே அனுசரணையாளர்கள் சந்தித்த பின்னர் 12 ஆம் பக்கம் பார்க்க)

# நாடாளுமன்றம் நேற்று கூடியது!

கொழும்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசிலிருந்து ஜே.வி.பி விலகியபின்னர் முதல் தடவையாக நேற்று நாடாளுமன்றம் கூடியது.

நேற்றைய தினம் உத்தேச பொதுக்கட்டமைப்புக் குறித்த எந்த வித பிரேரணையோ ஆவணமோ நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

நாடாளுமன்றத்திற்கு வந்த ஜே.வி.பி உறுப்பினர்கள் அரசாங்கத்தில் அங்கம் வகித்தபோது அவர்கள் அமர்ந்திருந்த ஆசனங்களிலேயே அமர்ந்தனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

# மேல்மாகாண முதலமைச்சராக நந்தன மெண்டிஸ் பதவியேற்பு!

கொழும்பு

மேல் மாகாணசபை முதலமைச்சராக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர் நந்தன மெண்டிஸ், ஆளுனர் அலவி மௌலானா முன்னிலையில் நேற்றுமாலை பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

முன்னர் முதலமைச்சராகப் பதவியிலிருந்து விலகிய றெஜினொல்ட் குரே தவிர வேறு எவர் முதலமைச்சர் பதவி வகித்தாலும் ஜே.வி.பி எதிர்க்காது என அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

எனினும், ஐ.தே.க மாகாணசபை ஆட்சியைக் கைப்பற்ற ஜே.வி.பி விரும்பாத காரணத்தாலேயே (12 ஆம் பக்கம் பார்க்க)

# பொலிஸ் புலனாய்வாளர் துப்பாக்கிச்சூட்டில் காயம்!

மட்டக்களப்பு


மட்டக்களப்பு பொலிஸ் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த சார்ஜன்ட் ஒரு வர் நேற்று முற்பகல் இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் காயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

ரணவீர சிசிர (வயது 42) என்பவரே காயமடைந்ததாக படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

குறித்த பொலிஸ் சார்ஜன்ட் மட்டக்களப்பு சிறைச்சாலை விடுதியில் இயங் கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவிலிருந்து மற்றுமொரு பொலிஸ் கான்ஸ்டபிளுடன் சைக்கிளில் (12 ஆம் பக்கம் பார்க்க)


EXPOAIR
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1
Your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...


# திருடிய பொருட்களை விற்ற இருவர் நாவற்குழியில் கைது



யாழ்ப்பாணம்

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் திருடப்பட்ட பொருட்களை விற்பனை செய்த 12 வயது சிறுவன் உட்பட இருவரை யாழ்ப்பாணப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நாவற்குழியிலுள்ள வீடொன்றில் திருடப்பட்ட பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து - நேற்று முன்தினம் குறிப்பிட்ட இடத்தில் நடத்திய சோதனையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டதுடன் விற்பனைக்கு வைத்திருந்த பொருட்களையும் மீட்டுள்ளனர்.

ரீவி, டெக், கசெட்றேடியோ, ஜெனரேற்றர், சங்கிலி, தாலிக்கொடி போன்ற பெறுமதியான பொருட்கள் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட இருவரும் ஆடியபாதம் வீதி, கல்வியங்காட்டுப்பகுதியில் வசிப்பவர்கள் என்பது தெரிய வந்துள்ளது.

மேலும் இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சிலர் தப்பியோடிவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவத்துடன் தொடர்புடைய இருவரும் இதற்கு முன்பும் பல குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டிருந்தாகத் தெரிய வருகிறது.

இந்தக் கொள்ளையுடன் தொடர்புடைய கும்பல் யுவதி ஒருவரையும் 12 வயதுடைய சிறுவனையும் பல கொள்ளைகளுக்குப் பயன்படுத்தி இருப்பதாக பொலிஸாருக்கு அவர்கள் தெரிவித்திருந்தனர்.

இவர்கள் இருவரையும் பொலிஸார் நேற்றுப் பிற்பகல் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

# ஞானச்சுடர் நூல்வெளியீடு

ஞானச்சுடர் நூல் வெளியீடு சைவக்கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் தொண்டமானாறு சந்நிதியான் ஆசிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆனி மாத ஞானச்சுடர் மலர் வெளியீட்டு விழா நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு ஆசிரம இயக்குநர் அமுதகலாயோகி செ.மோகதாஸ் சுவாமிகள் தலைமையில் விசேட பூசையின் பின் ஆரம்பமாகும்.

பேரவையின் தலைவர் க.அருள்லிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வை பேரவையின் கௌரவ உபபொருளாளர் செல்லையா நடராசா மங்களவிளக்கேற்றி ஆரம்பித்துவைப்பார்.

இந்த மலரின் வெளியீட்டுரையை யாழ்.வல்லை வைத்தீஸ்வரன் தேவஸ்தான பிரதமகுரு பிரம்மஸ்ரீ ப.மனோகரக்குருக்கள் வெளியீட்டுரையை இளைப்பாறிய ஆசிரியர் நவரெத்தினம் ஆகியோர் நிகழ்த்துவர்.

# போக்குவரத்துக்கு இடையூறாக அமைந்த கடைகள் அகற்றப்பட்டன

யாழ்ப்பாணம்

யாழ்.முனீஸ்வரன் வீதியில் போக்குவரத்துக்கு இடையூறாக அமைக்கப்பட்டிருந்த தகர கொட்டகைக் கடைகளில் ஒரு தொகுதி யாழ்.மாநகரசபை ஊழியர்களால் அகற்றப்பட்டுள்ளது.

வீதியின் கிழக்குப் பகுதியில் குளத்துக்கு சமீபமாக அமைந்திருந்த கடைகளே தற்போது முற்றாக அகற்றப்பட்டுள்ளன.

வீதியின் மேற்குப் புறமாக அமைந்துள்ள கடைகளும் மீதிக் கடைகளும் அடுத்ததாக அகற்றப்பட இருப்பதாக மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

அங்காடி வியாபாரத்துக்காக நீகல் படமாளிகைக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுவரும் கடைத் தொகுதிகளின் கட்டட வேலைகள் முடிவடைந்ததும் அவ்விடத்தில் இருந்த வியாபாரிகளுக்கு இடங்கள் ஒதுக்கி வழங்கப்படவிருப்பதாகவும் தெரியவருகிறது. (206)

# விழிப்புணர்வு பலகை இன்று திரைநீக்கம்

போதைப் பொருளை எதிர்த்து இன்று பருத்தித்துறை சுகாதார பணிமனையில் விழிப்புணர்வு பலகை ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

இன்று காலை 10 மணியளவில் இ.றெனிஸ்லஸ் தலைமையில் சுகாதாரப்பணிமனையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு பலகையை பருத்தித்துறை வைத்தியசாலை வைத்திய அதிகாரி எஸ்.கதிரவேற்பிள்ளை திரை நீக்கம் செய்து வைப்பார். இவ்வாறான விழிப்புணர்வுப் பலகைகள் நெல்லியடி, வல்வெட் டித்துறை ஆகிய பகுதிகளிலும் திறந்து வைக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (12)

## மணவாளக் கோல விழா

நாகேஸ்வரம் அளவெட்டி தெற்கு ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8 மணிக்கு மணவாளக் கோல திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற இருக்கிறது.

காலை 10 மணிக்கு வசந்த மண்டப் பூசை நடைபெறும். (206)

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

பிரதேச செயலக அணிகளுக்கிடையிலான உதைபந்தாட் டச் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று மாலை 4.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கோப்பாய் பிரதேச செயலக அணி எதிர் சங்கானை பிரதேச செயலக அணியும், யாழ்ப்பாண பிரதேச செயலக அணி எதிர் கரவெட்டி பிரதேச செயலக அணியும் மோதவுள்ளன. (12)

# ‘மனிதத்தை தேடி’ கவிதை நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்

நெடுந்தீவு மகேஷ் எழுதிய ‘மனிதத்தைத் தேடி’ கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலக்ஷ்சுமி அரங்கில் யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரி முதல்வர் கலாநிதி தி.கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக கல்வியியற்கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணியும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ்.மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் க.ஆர்வலன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக கவிஞர் நெடுந்தீவு லக்ஷ்மனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் வரவேற்பு உரையை வடமராட்சி கல்வி மேம்பாட்டுப் பேரவை இணைப்பாளர் வெ.புஸ்பதாஸும் நிகழ்வின் அறிமுகவுரையை நமது ஈழநாடு பிரதம ஆசிரியர் ராதேயனும் நிகழ்த்துவர்.

வெளியீட்டுரையை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி பா.தனபாலன் நிகழ்த்துவார்.

நூல் மதிப்பீட்டுரையை கவிஞர் பத்மநாதன், தினக்குரல் பத்திரிகை முகாமையாளர் சி.நடராஜா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

இதையடுத்து யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை தலைவர் பெரியதம்பி, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் ஆ.ஸ்ரீஸ்கந்தமுர்த்தி, கல்வி மேம்பாட்டுப் பேரவை செயலாளர் மு.அருணாசலம், தீவக கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வ.இராதாகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

# புனித மரியாள் வித்தியாலயத்தில் நாளை மறுதினம் முத்தமிழ் விழா

கொக்குவில்

யாழ்.புனித மரியாள் (ஓ.எல்.ஆர்) வித்தியாலய முத்தமிழ் விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஜெறோம் மண்டபத்தில் கல்லூரி அதிபர் ம.செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்.அடைக்கல அன்னை ஆலய பங்குத் தந்தை ம.இ.பயஸ் அடிகளார் ஆசியுரையுடன் நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைப்பார்.

முன்னாள் ஆரம்பக் கல்வி உதவிப் பணிப்பாளர் கமலா சுப்பிரமணியம் பிரதம விருந்தினராகவும், உதவிப் பங்குத் தந்தை அருட்திரு ம.கான்ஸ் போவர் அடிகள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள்.

கலை நிகழ்சிகளில் வரவேற்பு நடனம், கோலாட்டம், மீனவ நடனம், குழு இசைப் பாடல், சிறுவர் நாடகம், வில்லுப்பாட்டு, சான்றிதழ் வழங்கல், நாடகம் என்பன இடம்பெறும் (206)

## சிறுவர் பாதுகாப்பு கூட்டம்

மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழு கூட்டம் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் யாழ்.செயலகத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமான விடயங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளன. சிறுவர் பாதுகாப்பு உரிமை தொடர்புடைய நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றவுள்ளனர்.

## கலந்துரையாடல்

முன்பள்ளி பாடசாலை இணைப்பாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.வலயக்கல்வி அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் கோட்டத்துக்குட்பட்ட முன்பள்ளி பாடசாலை இணைப்பாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இதன்போது கலைவிழா, கண்காட்சி தொடர்பாக கலந்துரையாடப்பட இருப்பதாக வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.


## சிறு விளம்பரம்

**ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்**
**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள்கொண்டு கைரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகிறவை, தொழில் வியாபார இலட்சுமிகர விடயங்கள், விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு: ஹோட்டல் பிள்ளையார் இன், அறை இல.09 - 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P - 0779122836 நேரம்: காலை 9.00 - 8.30 வரை (1198)

**மனோகரா** யாழ்ப்பாணம்
அதிரடி வெளியீடு! சியான் விக்ரம், சதா, விவேக், பிரகாஷ்ராஜ், கவுண்டமணி, சார்லி ஆகியோரின் சிறந்த நடிப்பில்
**அந்நியன் anniyan**
இசை:- ஹரிஸ் ஜெயராஜ்
இயக்கம்:-சங்கர்
விசேட காட்சிகளும் உண்டு
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இன்று முதல் (23.06.2005)
Colin Faril Anjelina Polie and Anthony Hopkins நடித்த
**ALEXANDER** (ஆங்கிலம்)
**அலெக்ஸ்சாண்டர்**
காட்சிகள்
புதிய நேரம்:- 10.30,2.30,6.30,9.30

**நிறைஞ்சலாஸ்** சங்கானை
விஜயசாந்தி, சுஜாத்தா, லக்ஷ்மி நடித்த
**சூர்யா**
பஸ் போக்குவரத்துபாதை
இல 782 – காரைநகர் / 787 மாதகல்
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

**ராஜா** யாழ்ப்பாணம்
ரஜினிகாந், பிரபு, ஜோதிகா, நயன்தாரா, வடிவேல் நடித்த
**சந்திரமுகி**
பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

**நாகம்ஸ்** சுன்னாகம்
விக்ராந், தியா நடித்த
**கற்கக் கசடற**
காட்சிகள்:- 11.00,3.00, 6.00 (பழைய நேரம்)


# ஹன்ரர் - ஓட்டோ விபத்தில் நால்வர் படுகாயம்!

யாழ்ப்பாணம்

தென்மராட்சி மீசாலை புத்தூர் சந்தியில் ஓட்டோ ஹன்ரர் வாகனம் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஓட்டோவில் பயணம் செய்த நால்வர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் வரணி இயற்றாலையைச் சேர்ந்த ஆழ்வார்ப்பிள்ளை தங்கராசா (வயது 38), தங்கராசா பத்மகவி (வயது 30), கந்தசாமி தயாபரன் (வயது 22), கந்தசாமி அஜித்தா (வயது 24) ஆகியோரே காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து வரணி நோக்கி ஓட்டோவில் பயணம் செய்து கொண்டிருந்த வேளை எதிரே வந்த ஹன்ரருடன் மோதிக் கொண்டதில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர். (29)



# நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு தடையாக ஜே.வி.பியினர் இருந்துள்ளனர்

## அநுரா பண்டாரநாயக்க தெரிவிப்பு



கொழும்பு

ஜே.வி.பியினரின் செயற்பாடுகளால் கடந்த காலங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்த முடியாமல் இருந்தது. இப்போது இந்தத் தடைகள் நீங்கியிருப்பதால் நாட்டை எந்தப் பிரச்சினையும் இல்லாமல் முன்கொண்டு செல்லக்கூடியதாக இருக்கும் என சுற்றுலாத்துறை அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த காலங்களில் ஜே.வி.பி சகோதரர்களின் செயற்பாடுகளால் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளமுடியாதிருந்தது. தற்போது அந்தத் தடை நீங்கியிருப்பதால் நாட்டை எவ்வித பிரச்சினையுமின்றி முன்கொண்டு செல்லமுடியும்.

ஜே.வி.பியினர் மீண்டும் எம்முடன் இணைய வருவார்களாயின் பிரச்சினையில்லை. ஆனால், அப்படி அவர்கள் வந்தாலும் எமது நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே அவர்கள் செயற்படவேண்டும். சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் முக்கிய பிரச்சினை பசி, பட்டினி. அதனைத் தீர்க்க நாம் கண்டிப்பாக முன்வரவேண்டும்.

அதற்கென எமக்கு பெருமளவு உதவி கிடைத்துள்ளது. அவற்றை நாம் விநியோகிக்க வேண்டும். நாம் எதிர்காலத்தில் பல அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்த வேண்டியுள்ளது. பாதைகளைத் திருத்த வேண்டும். மின் விநியோகம் வழங்கவேண்டும். சரித்திரத்தில் முதல் தடவையாக எமக்கு இவற்றுக்கென பெருமளவு உதவித் தொகைகள் கிடைத்து வருகின்றன.

அதனை நாட்டிலுள்ள அனைத்து மக்களினதும் மனம் குளிரும் வகையில் பயன்படுத்தவேண்டும். எமது பொருளாதார சீர்திருத்தத்துக்கு ஜே.வி.பியினரே தடங்கலாக இருந்தனர். இப்போது அந்தத் தடை இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# தொண்டராசிரியர்களின் விபரங்கள் கோரல்!

கொழும்பு


2000, 2001 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தொண்டர் ஆசிரியராக கல்வி கற்பித்த ஆசிரியர்களின் விபரங்களை, எதிர்வரும் 2 வார காலப்பகுதிக்குள் அனுப்பிவைக்கும்படி, வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள கல்விப் பணிப்பாளர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

அதேவேளை, இடைவிலகிய மற்றும் பாடசாலைகளுக்கு செல்லாத மாணவர்களின் நலன் கருதி மேற்கொள்ளவேண்டிய மேம்பாட்டு நடவடிக்கைகள் குறித்து ஆராய, வவுனியாவில் முக்கிய கூட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கு வடக்கு- கிழக்கு வலய கல்விப் பணிப்பாளர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், சிறுவர் நலன் பேணும் அதிகாரிகள், மற்றும் பாடசாலை அதிபர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். (01)

# பொதுக்கட்டமைப்புக்கு எதிராக தீவிர போராட்டங்கள் வெடிக்கும்!

## தம்பர அமில தேரர் எச்சரிக்கை



கொழும்பு

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்வை மீளக் கட்டியெழுப்பும் வகையில் உருவாக்கப்படவுள்ள பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையில், கைச்சாத்திடும் வகையிலான செயற்பாட்டை அரசாங்கம் மேற்கொள்ளுமானால் அதற்கெதிராக போராட்டங்களை முனைப்புடன் நடத்தவுள்ளதாக, தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் தம்பர அமில தேரர் எச்சரித்துள்ளார்.

கண்டியில் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதன் மூலம், விடுதலைப் புலிகளை அரசாங்கம் அங்கீகரிக்கும் நடவடிக் கையை மேற்கொண்டு வருகின்றது.

எனவே, இதற்கெதிராக நாம் எமது போராட்டத்தை நாடு தழுவிய ரீதியில் விஸ்தரிக்கவுள்ளோம் எனத் தெரிவித்தார்.

# சுனாமி நிதி சேகரிப்பில் போலி அமைப்பு மோசடி!

கொழும்பு

வெளிநாட்டில் அமைக்கப்பட்டுள்ள (Friends of Srilanka) சிறிலங்காவின் நண்பர்கள் எனும் அமைப்பின் பெயரை போலியாகப் பயன்படுத்தி கொழும்பில் இயங்கும் குறிப்பிட்ட சுற்றுலா அமைப்பொன்று சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கென நிதி சேகரித்து வருவதான தகவல் வெளிவந்துள்ளதாக இலங்கை சுற்றுலா சபை தெரிவித்துள்ளது.

இந்தப் போலி அமைப்புக்கு வெளிநாடுகளில் மிகப் பாரியளவில் நிதி சேர்ந்துள்ளது. எனினும் எவ்வளவு தொகை அவர்களால் திரட்டப்பட்டுள்ளதென்பது குறித்து தகவல் பெறமுடியாதுள்ளது.

இந்தச் சுற்றுலா அமைப்பு - சுற்றுலாத்துறை சட்டத்தை மீறியே இந்த நிதியைச் சேகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சுற்றுலா நிறுவனங்களுக்கு சுனாமி நிதி சேகரிப்பதற்கு எந்தவித அனுமதியும் வழங்கப்படவில்லை.

சுனாமி நிவாரணப் பணிகளுடன் தொடர்புடைய நிறுவனங்கள் அரசிடம் பதிவை மேற்கொள்ளவேண்டுமெனவும், இந்தப் போலி நிறுவனம் குறித்து ஜனாதிபதி செயலகம் ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்ளவேண்டுமென உல்லாசப் பயணத்துறை அதிகாரியொருவர் தெரிவித்தார். (தே)

# தரம் – 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாற்றங்கள்

கொழும்பு

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் கல்வி அமைச்சு பாரிய மாற்றங்களைச் செய்யவுள்ளது. அந்த மாற்றங்கள் இந்த ஆண்டு முதல் அமுலுக்கு வருகிறது.

ஒரு மணி நேரத்துக்கான வினாப் பத்திரம் I இற்கான பரீட்சை 45 நிமிடங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. ஒன்றரை மணி நேரத்துக்கான பத்திரம் II இற்கான பரீட்சை ஒரு மணித்தியாலமாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

மாணவரின் தேர்ச்சியை மையமாக வைத்து வினாப்பத்திரம் தயாரிக்கப்படவுள்ளது. அறிவு விடயம் என்பவற்றுக்கப்பால் புதிய அணுகுமுறை பின்பற்றப்படவிருக்கிறது.

இந்த வருடத்திலிருந்து புலமைப்பரிசில் பெறும் மாணவர் ஒருவர் 500 ரூபாவை உதவு தொகையாகப் பெறவுள்ளார். இந்தத் தொகை 10 மாதங்களுக்கு வழங்கப்படும்.

# மேல்மாகாண சபை முதலமைச்சர் நியமனத்தில் நெருக்கடி நிலை!

கொழும்பு

மேல்மாகாண சபையில் எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை இல்லாததால் - புதிய முதலமைச்சர் ஒருவரை நியமிப்பதில் நெருக்கடிநிலை தோன்றியுள்ளது.

மேல் மாகாண முதல்வராக இருந்த றெஜினோல்ட் குரே பதவி விலகியதிலிருந்தே இந்த நிலை தோன்றியுள்ளது.

மேல்மாகாண சபையில் ஆளும் கட்சிக்கு 59 ஆசனங்கள் கிடைத்திருந்தன. எனினும், ஜே.வி.பி உறுப்பினர்கள் 23 பேரும் கடந்த திங்கட்கிழமை எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்ததால் - ஆளும் கட்சி பெரும்பான்மையை இழந்தது.

இந்த நிலையில் மாகாண சபையில் பெரும்பான்மை இருக்கும் கட்சியின் உறுப்பினர் ஒருவரை முதலமைச்சராக நியமிக்குமாறும், அதற்கு முன்னர் மாகாண சபையில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளினதும் தலைவர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்துமாறு மேல் மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சி குழுத்தலைவர் கீத்திசிறி கஹாட்டபிட்டிய, ஆளுநர் அலவி மௌலானாவிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மாகாணசபையில் ஆளும் கட்சி பெரும்பான்மையை இழந்துள்ளதால், ஐக்கிய தேசியக் கட்சிக்கே தற்போது பெரும்பான்மையுள்ளது. அதனால் பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பானவரை முதலமைச்சர் பதவிக்கு நியமிக்காது பெரும்பான்மை உள்ள கட்சியின் உறுப்பினர் ஒருவரை அந்தப் பதவிக்கு நியமிக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (தே,01)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்

ஊர்காவற்துறை சென்.அன்ரனீஸ் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று முற்பகல் 10.00 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவுக்கு பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற மாகாண கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பியும் கலந்துகொள்ளவுள்ளார்.

# மாதாந்த கொடுப்பனவு

யாழ்ப்பாணம்

தொண்டமனாறு சந்நிதியான் ஆசிரம சைவ கலை பண்பாட்டு பேரவையால் நீர்வேலி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் தொண்டர் ஆசிரியராக பணியாற்றும் இருவருக்கு மாதாந்தம் 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவாக வழங்கப்பட்டு வருவதாக ஆசிரம இயக்குனர் செ.மோகனதாஸ் தெரிவித்தார்.

# அரசாங்கத்தை விட்டு விலகப்போவதாக தேசிய ஐக்கிய முன்னணியும் மிரட்டல்?

கொழும்பு



பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களின் அபிலாஷைகளுக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை என்ற கோஷத்துடன், அரசில் அங்கம் வகிக்கும் பேரியல் அஷ்ரப் தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணி ஜனாதிபதிக்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ளது.

பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கு உரிய இடம் வழங்கப்படவில்லையென ஜனாதிபதியுடன் முறுகிக்கொண்டு நேற்றுமுன்தினம் இரவு அரசை விட்டு விலகுவதாக அறிவிக்கவிருந்த தேசிய ஐக்கிய முன்னணி தலைவி பேரியல் அஷ்ரப்பை சமாதானம் செய்த ஜனாதிபதி- பேரியலின் கோரிக்கை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார் என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

கொழும்புக்கு வந்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் - முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை சந்தித்துப் பேசிய போது 'பொதுக்கட்டமைப்பை இனியும் இழுத்தடிக்கத் தயாரில்லை. அது இறுதியாக்கப்பட்டுவிட்டது. அதில் விரைவில் கைச்சாத்திடவே விடுதலைப் புலிகள் விரும்புகிறார்கள்' என்று தெரிவித்தார்

இதனை அடுத்து உத்தேச வரைபில் முஸ்லிம்களின் அபிலாஷைகள் கரிசனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்றும், இந்த நிலையில் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டால், பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்றும் முஸ்லிம் காங்கிரஸ் எச்சரித்திருந்தது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை ஹெல்கிசன் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில் முஸ்லிம் விவகாரம் குறித்து சாதகமான தகவல் எதுவும் கிடைக்காததையடுத்து, நேற்றுமுன்தினம் இரவே அரசை விட்டு வெளியேற தேசிய ஐக்கிய முன்னணி தயாரானது. இதையறிந்த ஜனாதிபதி சந்திரிகா உடனடியாக தேசிய ஐக்கிய முன்னணி தலைவி பேரியல் அஷ்ரப்பை அழைத்துப் பேசினார்.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்திக்கவுள்ள ஹெல்கிசன் - முஸ்லிம்களின் கவலை குறித்து அவரிடம் எடுத்துக்கூறுவார் என்றும், இது தொடர்பாக முஸ்லிம்களுக்கு சாதகமானதொரு பதில் கிடைக்குமென தாம் நம்புவதாகவும், ஜனாதிபதி சமாதானம் கூறிய பின்னர் அரசை விட்டு வெளியேறும் முடிவை தேசிய ஐக்கிய முன்னணி கைவிட்டதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை ஜனாதிபதி பேச்சுக்கு அழைத்துள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

## நட்வெஸ்ட் முக்கோணத் தொடர்

# 2 ஆவது சுற்று ஆட்டத்தில் இங்கிலாந்து பங்களாதேஷ் அணியை தோற்கடித்தது!





லண்டன் —

நட்வெஸ்ட் கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டாவது சுற்றுக்கான இங்கிலாந்து - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில்இங்கிலாந்து 168 ஓட்டங்களால் பங்களாதேஷைத் தோற்கடித்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இதில் தொடக்க ஜோடியாக திரஸ்கொதிக் -ஸ்ரரஸ் இறங்கியது. இவர்கள் இருவரும் ஆரம்பம் முதல் சிறப்பாக விளையாடினர். இதனால் இந்த ஜோடியைப் பிரிப்பதில் பங்களாதேஷ் பந்துவீச்சாளர்கள் பெரும் சிரமப்பட்டனர்.

இந்த நிலையில் இங்கிலாந்து அணி 141 ஓட்டங்களை பெற்றிருக்கையில் தொடக்க ஜோடி பிரிக்கப்பட்டது. இதில் 65 பந்துகளில் 2 சிக்ஸர், 14 பவுண்டரிகள் அடங்கலாக 85 ஓட்டங்களைப் பெற்றிருந்த திரஸ்கொதிக் ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து ஸ்ரரஸுடன், வோகன் இணைந்தபோதும் அவர் ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்தார். இதன்பின் பிளின்ரொப்பும் பிரகாசிக்கத் தவறினார். அவர் 21 பந்துகளில் 1 பவுண்டரி, 1 சிக்ஸர் அடங்கலாக 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து கொலிங்வூட், ஸ்ரரஸுடன் இ[illegible]ந்தார் இவர்கள் இருவரது ஆட்டத்திலும் அனல் பறந்தது. அதில் ஸ்ரரஸ் 128 பந்துகளில் 19 பவுண்டரிகள் அடங்கலாக 152 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் 50 ஓவர் நிறைவில் இங்கிலாந்து அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 391 ஓட்டங்களை குவித்தது. இதில் கொலிங்வூட் 86 பந்துகளில் 5 சிக்ஸர்கள், 10 பவுண்டரிகள் அடங்கலாக 112 ஓட்டங்களுடனும், ஜோன்ஸ் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்து வீச்சில் றஷ்முல் ஹிசைன் 3, அஷ்ரப் அகமட் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 392 என்ற கடினமான இலக்குடன் களமிறங்கிய பங்களாதேஷ் அணி 45.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றதால் 168 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதில் ஆரம்ப வீரர் யாவிட் ஓமர் 59, சரியர் நபீஸ் 10, மொகமட் அஷ்ரபுல் 52 பந்துகளில் 3 சிக்ஸர் 11 பவுண்டரிகள் அடங்கலாக 94, ஹபிபுல் பஷார் 16, மொகமட் ரபீக் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் ரெம்லெட் 4, கொலிங்வூட் 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

## முத்தரப்பு கிரிக்கெட் போட்டி

# இந்திய அணியின் முதற்கட்ட வீரர்களின் பெயர்கள் அறிவிப்பு

பெங்களூர் —

முத்தரப்பு கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்ளும் 36 வீரர்கள் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. கப்டன் கங்கூலி அணியில் இடம்பிடித்துள்ளார்.

இலங்கையில் முத்தரப்பு கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளது. இதில் இந்தியா, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய மூன்று அணிகள் கலந்துகொள்கின்றன.

இதில் பங்கேற்கவுள்ள இந்திய அணிக்கு வீரர்களைத் தேர்வு செய்வதற்கான முதற்கட்டப் பட்டியல் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது. அதில் 36 வீரர்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. அதிலிருந்து கடைசியாக 16 வீரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட முதற்கட்டப் பட்டியலில் இடம்பெற்றுள்ள 36 வீரர்களின் பெயர்கள் வருமாறு -

கங்கூலி, ஷேவாக், ராவிட், கைவ், யுவராஜ் சிங், லக்ஸ்மன், தினேஷ் மொங்கியா, கம்பீர், சுரேஷ் ரெய்னா, வேணு கோபால ராவ், நீரஜ் பட்டேல், தீரஜ் ஜாதவ், டோனி, தினேஷ் கார்த்திக், பார்த்தீவ் பட்டேல், கும்ளே, ஹர்பஜன் சிங், முரளி கார்த்திக், எஸ்.ஸ்ரீராம், ஹேமங் பதானி, சகீர்கான், எல்.பாலாஜி, ஆசிஷ் நெஹ்ரா, இர்பான் பதான், அகர்கர், காகன்தீப்சிங், எஸ்.எஸ். போல், ரானாதேப்போஸ், ஹர்பிந்தர் சிங், அமித் பண்டாரி, சித்தாத் திரிவே, ஸ்ரீசாந்த், ஜோகிந்தர் சர்மா, முனாப் பட்டேல், ஜெ.பி.யாதவ், ஜேசுராஜ்.

இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ள ஹர்பிந்தர் சிங் வேகப்பந்து வீச்சாளர் ஆவார். சுரேஷ் ரெய்னா உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த சகலதுறை ஆட்டக்காரர் ஆவார். நீரஜ் பட்டேல் குஜராத்தைச் சேர்ந்த இடதுகை துடுப்பாட்டக்காரர் ஆவார்.

டெண்டுல்கர் காயத்துக்கு சத்திரசிகிச்சை செய்து 16 வாரம் ஓய்வில் இருப்பதால் அவருடைய பெயர் இந்தப் பட்டியலில் இடம்பெறவில்லை.

# விம்பிள்டன் ரெனிஸ் போட்டி ஹெனின் அதிர்ச்சித் தோல்வி

லண்டன்

கிராண்ட் ஸ்லாம் பட்டங்களில் ஒன்றான விம்பிள்டன் ரெனிஸ் போட்டி இங்கிலாந்து விம்பிள்டன் நகரில் நடந்து வருகிறது.

இதில் முதல் சுற்று போட்டிகள் தற்போது நடந்து வருகின்றன. அமெரிக்காவின் இரட்டைச் சகோதரிகளான வீனஸ் வில்லியம்ஸ், செரீனா வில்லியம்ஸ் ஆகியோர் நேற்றுமுன்தினம் நடந்த போட்டியில் பங்குபற்றினர்.

வீனஸ் வில்லியம்ஸ் செக்குடியரசைச் சேர்ந்த இவா பிர்னெராவாவை 6-2, 6-4 என்ற நேர் செட்டில் வீழ்த்தினார். செரீனா வில்லியம்ஸ் சக நாட்டைச் சேர்ந்த ஏஞ்சலாவை 6-7 (12-14) 6-4, 6-2 என்ற நேர் செட்டில் வீழ்த்தினார்.

விம்பிள்டன் சம்பியன் பட்டத்தை வெல்வார் என்று எதிர்பார்க்கப்பட்ட வீராங்கனைகளில் ஒருவர் பெல்ஜியம் வீராங்கனை ஜஸ்டின் ஹெனின் பிரெஞ் ஓபன் சம்பியன் பட்டதை வென்ற கையோடு அவர் இந்தப் போட்டியில் பங்கேற்க வந்திருந்தார். முதற் சுற்றில் அவர் கிறீஸ் நாட்டைச் சேர்ந்த எலினி டேனிலிடோவை எதிர்கொண்டார். எலினி உலக தரவரிசைப் பட்டியலில் 76 ஆவது இடத்தில் இருப்பவர் ஆவார்.

முதல் ஆட்டத்திலேயே ஜஸ்டின் ஹெனின் தடுமாறினார். 7-6 (10-8) என்ற புள்ளிகளில் முதற் சுற்றை எலினி கைப்பற்றினார். பின்னர் சுதாகரித்துக்கொண்ட ஹெனின் 6-2 என்ற புள்ளிகளில் 2 ஆவது சுற்றை கைப்பற்றிக் கொண்டார்.

ஆனால், 3 ஆவது சுற்றில் எலினி ஆக்ரோஷமாக ஆடி 7-5 என்ற புள்ளிகளில் வென்றார். இதன் மூலம் எலினி 7-6,2-6, 7-5 என்ற செட்களில் வெற்றி பெற்றார். பிரெஞ் ஓபன் சம்பியனான ஹெனின் முதற் சுற்றிலேயே வெளியேறியமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

உலகில் 2 ஆம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் மரியா ஷரபோவா, ஸ்பெயினைச் சேர்ந்த நுரியாவை 6-2,6-2 என்ற நேர்செட்டில் வென்று 2 ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றார்.



அதேபோல முன்னணி வீராங்கனைகளான நடியா பெட்ரோவா, மேரி பியர்ஸ் ஆகியோரும் 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றனர். மேலும் ஒரு ஆட்டத்தில் டேனிலா கண்டுகோவா (ஸ்லோவாக்கியா) 3-6, 6-2, 6-2 என்ற செட் கணக்கில் எவ்ஜினியாவை (ரஷ்யா) தோற்கடித்தார்.

ஆண்கள் பிரிவில் நடந்த முதற்சுற்று ஆட்டம் ஒன்றில் 2 ஆம் நிலை வீரரான அன்டி ரொடிக் 6-1,7-6 (7-4) 6-2 என்ற செட் கணக்கில் ஜிரிவனெக்கை தோற்கடித்தார்.

மற்றய ஆட்டங்களில் ரடேக் ஸ்டீபனேக், குயிலர்மோகோரியா, ஜரிஜன்மெர்செர், ஜிரிநோவாக் ஆகியோர் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினர்.

பெண்கள் இரட்டையர் பிரிவில் நேற்று நடந்த முதற்சுற்று ஆட்டம் ஒன்றில் இந்திய நட்சத்திர வீராங்கனை சானியா மிர்சா, அன்னா சாக்வேட்டாட்சே (ரஷ்யா) ஜோடி - அலீனா ஜிட்கோவா (ரஷ்யா)-தாதியானா (உக்ரைன்) ஜோடியை எதிர்கொண்டது.

ஆரம்பம் முதலே பதற்றத்துடன் ஆடிய சானியா ஜோடி 2-6, 1-6 என்ற நேர் செட் கணக்கில் தோல்வியைச் சந்தித்தது.

## பாடசாலை மட்ட கிரிக்கெட்

# கனகரத்தினம் மகா வித்தியாலயத்தை இனிங்ஸால் வென்றது யாழ்.இந்து!



யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப்பிரிவு அணிகளிடையே சி பிரிவில் நடைபெற்ற முதற்சுற்று ஆட்டம் ஒன்றில், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணியை ஒரு இனிங்ஸ் வித்தியாசத்தில் யாழ்.இந்துக்கல்லூரி அணி வெற்றி கொண்டது.

யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி முதலில் யாழ்.இந்துக் கல்லூரி அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணி 48.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 239 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் நிவேஜிதன் 66 ஓட்டங்களையும், சுதாகரன் 61 ஓட்டங்களையும், டிலான் 33 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணியின் சார்பில் கண்ணராஜ் 4 விக்கெட்டுக்களையும் இனோசன் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி 17.4 ஓவர்களைச் சந்தித்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 96 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. இனோசன் ஆட்டமிழக்காமல் 49 ஓட்டங்களையும், கண்ணராஜ் 12 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்.இந்துக் கல்லூரி அணியின் சார்பில் உமாதரன் 3 விக்கெட்டுக்களையும், பிரியதர்சன் 2 விக்கெட்டுக்களையும், கௌரிநாத் 2 விக்கெட்டுக்களையும், பௌசுதன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து 2 ஆவது இனிங்ஸை ஆடுமாறு யாழ். இந்துக் கல்லூரி பணித்ததற்கேற்ப 2 ஆவது இனிங்ஸை ஆடிய கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 88 ஓட்டங்களை மட்டுமே பெற்றதால் 1 இனிங்ஸாலும் 55 ஓட்டங்களாலும் யாழ்.இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

இதில் இனோசன் 31 ஓட்டங்களையும், பிரபுராஜ் 23 ஓட்டங்களையும், மனோஜ் 15 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் பௌசுதன் 5 விக்கெட்டுக்களையும், கௌரிநாத் 2 விக்கெட்டுக்களையும் பிரியதர்சன் 2 விக்கெட்டையும் கைப்பற்றினர். (58)

## உதைபந்தாட்டப் போட்டியின் இன்றைய ஆட்டங்கள்

தமிழீழ விளையாட்டுத்துறை வடமராட்சிபிரிவு ஆதரவுடன் பருத்தித்துறை உதைபந் தாட்ட லீக் நடத்தும் 9 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டப்போட்டி வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றுவருகிறது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் மாலை 3.30 மணிக்கு கழுகுகள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அண்ணாசிலையடி இளைஞர் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளன.

## விளையாட்டு

### கொன்பெடரேசன் உதைபந்தாட்டம்

# ஆர்ஜென்ரீனா - ஜேர்மனி அணிகளின் போட்டி சமநிலையில் முடிந்தது!

கொன்பெடரேசன் கால்பந்து போட்டிகள் ஜேர்மனியில் நடந்துவருகின்றன.

இதில் நேற்றுமுன்தினம் நடந்த போட்டியில் ஆர்ஜென்ரீனாவும் ஜேர்மனியும் மோதின இரு அணிகளும் தலா 2 கோல்களை அடித்தன. இதனால் போட்டி சமநிலையில் முடிந்தது.

இன்னொரு போட்டியில் அவுஸ்ரேலியாவும், துனிசியாவும் மோதின. இதில் துனி சியா 3 கோல்கள் அடித்து வெற்றி பெற்றது. எனினும் அவுஸ்ரேலியாவால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை.

# பாரம்பரிய கலைகளை கற்கைநெறியாக்கி பட்டங்களை வழங்குவதற்கு நடவடிக்கை!

## பேராசிரியர் எஸ்.மோகனதாஸ்



சுதுமலை—

பாரம்பரிய கலையை ஒரு பாடமாக எடுப்பதற்கு பல்கலைக்கழகத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம். ஒரு வருட கற்கையாகவுள்ள இந்தப் பாடநெறியை மூன்றுவருட கற்கைநெறியாக மாற்றி பட்டம் வழங்கவுள்ளோம்.

இதனூடாக எமது பாரம்பரிய கலையை வளர்ப்பதுடன், மறைந்த கலைஞர்களுக்கு கௌரவம் வழங்கும் நிகழ்வாகவும் இதனை மாற்றவுள்ளோம் என யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் தெரிவித்தார்.

அரியாலை கலைஞர் வி.கே. இரத்தினத்தின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

கல்லைப்பீடத்தில் இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் நடனம், சங்கீதம், சித்திரமும் வடிவமைப்பும் ஆகிய கற்கைநெறிகளை செய்முறை ஊடாக அதாவது அரங்காற்றுகைகள் மூலமாக நடத்தி வருகிறோம். இதுபோன்றதொரு பட்டச்சான்றிதழ் கற்கைநெறியை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

அற்புத கலைஞர் வி.கே.இரத்தினம், கவிஞர் கே.வி.ஐயாத்துரை போன்ற பல கலைஞர்களால் அரியாலை மண்ணுக்கே பெரும் புகழ் ஏற்பட்டது. தொடர்ந்தும் ஏற்பட்டு வருகிறது. எமது மூத்த கலைஞர்கள் பகலில் ஆண்களாகவும், இரவில் பெண்களாகவும் வலம்வந்த பெருமைக்குரியவர்கள். பெண்களே பொறாமைப்படுமளவுக்கு வேடமிட்டு நடித்ததில் வி.கே.இரத்தினம் முதன்மையானவர் எனத் தெரிவித்தார்.

நினைவஞ்சலிக் கூட்ட நிகழ்வு கடந்த சனிக்கிழமை மாலை நாவலர் கலாசார மண்டபத்தில் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழக செயலாளர் செல்லையா மெற்றாஸ்மயில் தலைமையில் இடம்பெற்றது.

இங்கு சி.சிவதாசன் தொகுத்த 'பாடிப்பறந்த இசைக்குயில்' நூல் வெளியீடும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை, யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி உட்பட துறை சார்ந்த கலைஞர்களும் அஞ்சலியுரையாற்றினர். நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவநேசன், ஈழவேந்தன், பல்கலைக்கழக பேராசிரியர்கள், கலைஞர்கள் என பெருமளவானோர் இந்த நிகழ்வில் பங்குகொண்டனர். (91)

# கவின்கலை கல்லூரிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்—

திருமறைக் கலாமன்றம் நடத்திவந்த கவின்கலை பயிலகம் தற்போது கவின்கலை கல்லூரியாக விரிவுபடுத்தப்பட்டு, கவின்கலை பயிற்சிகளை வழங்கவுள்ளது.

இந்தக் கல்லூரியில் வாய்ப்பாட்டு, மிருதங்கம், கிற்றார், பரதம், வீணை, ஒகன், கதகளி, வயலின், ஓவியம், புல்லாங்குழல் போன்ற பயிற்சி வகுப்புகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

இவ்வாறான கலைகளை பகுதி நேரமாகக் கற்பிப்பதற்குத் தகுதி வாய்ந்த ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பங்களை பொதுச்செயலாளர், திருமறைக் கலாமன்றம், 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பழமை பேசி பெருமைப்படுகின்றோமே தவிர நிகழ்கால சாதனையாளர்களை காணவில்லை

## எழுத்தாளர் ஜோசெப் பாலா

சுதுமலை—

பல அறிஞர்கள், கல்விமான்கள் பிறந்த ஊரென பழமை சொல்லிப் பெருமைப்படுகிறோமே தவிர நிகழ்கால சாதனையாளர்களைக் காணவில்லை. ஊருக்குப் பெருமை சேர்க்கும் வகையில் நாம் வளரும் அதே வேளை, அந்தக் கிராமத்தை நல்வழிப்படுத்தும் செயற்பாடுகளையும் முன்னெடுக்கவேண்டும். இதன் ஓர் அங்கமாகவே மணி ஓசை கல்வி நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என எழுத்தாளர் ஜோசெப் பாலா தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை ஊர் காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியில் கல்லூரி அதிபர் அருட்திரு யேசுதாசன், ஆசிரியர் கீதகியோமர் ஆகியோரால் மணி ஓசை கல்வி நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

போதிய கல்வி வசதி வாய்ப்புகள் இல்லாததைக் கருத்திற் கொண்டே இவ்வாறானதொரு பணியை மேற்கொண்டமையால் - இந்தக் கிராம மாணவர்கள் மட்டுமன்றி, அயல் கிராம மாணவர்களும் பெரிதும் நன்மையடைவர்.

அரசாங்கமோ, அரசசார்பற்ற நிறுவனங்களோ கட்டடங்களையே புனரமைத்து வருகின்றனர். இவர்களால் மேலதிக கல்விக்கான ஏற்பாடுகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

மாணவ சமூகத்தை மாற்றியமைத்து, பல வழிகளிலும் முன்னேற்ற வேண்டுமாயின் இவ்வாறான கல்வி நிலையங்கள் கிராமப் புறங்களுக்கு மிகவும் அவசியமாகும். கடலோசையை வெல்லும் மணியோசை போல அறிவோசை மேலோங்க மணி ஓசை கல்வி நிலையம் பங்காற்ற வேண்டுமென ஜோசெப் பாலா கேட்டுக்கொண்டார்.

தரம் - 5 முதல் உயர்தரம் வரையான வகுப்புகளைக் கொண்ட இந்தக் கல்விநிலைய ஆரம்ப வைபவத்தில் அருட் சகோதர சகோதரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (91)

# ஓட்டோ - மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் காயம்!

ஓட்டோ - மோட்டார் சைக்கிள் நேர் எதிரே மோதி விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்களில் பயணித்தவர் தூக்கி வீசப்பட்டு தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் நண்பகல் 12 மணிக்கு தட்டாதெருச் சந்தியில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் - ஆனைக்கோட்டையைச் சேர்ந்த தி.ரஜீபன் (வயது 24) என்பவரே தலையில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

சம்பவதினம் ஆனைக்கோட்டையிலிருந்து இவர் சாவகச்சேரி நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது, எதிரே வந்த ஓட்டோவுடன் மோதியதால் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிய வருகிறது.

# இராணுவ காவலரண்கள் குடாநாட்டில் புனரமைப்பு!

கொக்குவில்—

யாழ்.நகர மற்றும் புறநகர்ப் பகுதிகளில் இராணுவக் காவலரண்கள் புதிதாக அமைக்கப்பட்டும், கைவிடப்பட்டவை புனரமைக்கப்பட்டும் வருகின்றன.

யாழ். முதலாம் குறுக்கு வீதியில் சுதந்திரக்கட்சி காரியாலயம் அமைந்துள்ள கட்டடத்துக்கு அருகாமையில் இருந்த காணியில் புதிதாகக் காவலரண் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

அதேவேளை காக்கைதீவு, நாவாந்துறை வீதியில் கைவிடப்பட்டிருந்த பல காவலரண்கள் புனரமைக்கப்பட்டு காணப்படுகின்றன.

குருநகர் மீன் சந்தைப்படுத்தும் வாடிப் பகுதியிலும் புதிய படையினர் நிறுத்தப்பட்டு, புதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக கடற்தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

அடையாள அட்டை இல்லாமல் வாடிக்கு மக்களை அனுமதித்துவந்த நடைமுறை நீங்கி, இப்பொழுது அடையாள அட்டைகளுடன் வருவோரையே வாடிக்குள் செல்ல அனுமதிக்கப்படுகிறது. (206)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் படுகாயம்!

யாழ்ப்பாணம்—

வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் பூநகரியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், வட்டக்கச்சியைச் சேர்ந்த எஸ். பிரசாத் (வயது 24) என்பவரே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

வட்டக்கச்சியிலிருந்து பூநகரிக்கு சென்றுகொண்டிருந்தபோது இந்தச்சம்பவம் இடம்பெற்றதாகவும், காயமடைந்தவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

# முன்பள்ளி விளையாட்டு விழா

மானிப்பாய்—

வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின், மானிப்பாய் முன்பள்ளி பாடசாலைச் சிறார்களின் வருடாந்த விளையாட்டு விழா - இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலக மைதானத்தில் மானிப்பாய் பட்டின உப அலுவலகத்தின் பொறுப்பதிகாரி சி.குலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் க.இராசையாவும், சிறப்பு விருந்தினராக பிரதேச சபையின் மேரி ஜோசப் சாந்தசீலன், முன்னாள் செயலாளர் பி.விக்டர், வலி.தென்மேற்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.வெ.தமிழ்மாறன், உள்ளூராட்சி உதவியாளர் செ.ரமேஷ் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (100)

# மாணவர்களுக்கு நிதியுதவி

மானிப்பாய்—

சுனாமி அனர்த்தத்தால் பெற்றோரை இழந்த பிள்ளைகள் தொடர்ந்தும் கல்வி கற்பதற்கு வசதியாக மாதாந்தம் உதவித் தொகையொன்றை வழங்குவதற்கு சர்வோதய இயக்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

'ஒரே உலகு - ஒரே மக்கள்' என்ற திட்டத்தின் கீழ் இந்த நிதி உதவித்திட்டம் முன்னெடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் ஆரம்ப கட்டமாக பாடசாலை செல்லும் 86 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுக்குரிய நிதியுதவிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஜப்பான் நாட்டில் தற்போது செயற்பாட்டிலுள்ள 'ஒரே உலகு ஒரே மக்கள்' என்ற அமைப்பின் தலைவர் சுசுகியின் வழி நடத்தலின் கீழ் இந்தத் திட்டத்துக்கான நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (100)

# உளவள மேம்பாட்டு திட்டம்

சிறுவர் பாதுகாப்பு இலங்கை நிறுவன உதவியுடன் வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட வல்வெட்டித்துறைப்பகுதியில் உள்ள 06 சிறுவர் கழகங்கள் புனரமைப்புச் செய்வதோடு - அவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கல் உட்பட சமூக உளவள மேம்பாடு தொடர்பான செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இந்தச் செயற்திட்டத்துக்காக 3 லட்சத்து 55 ஆயிரத்து 520 ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (44)

# கிட் காட்டில் இப்படியும் மோசடி

மானிப்பாய்—

குடாநாட்டில் பல பகுதிகளிலுமுள்ள டயலொக் கிட் காட் முகவர் நிலையங்களில் பாவித்த கிட் காட்களை அதன் இரகசிய இலக்கத்தின் மீது அலுமினிய முலாம் பூசி மீண்டும் விற்கப்படும் மோசடிகள் நடைபெற்றுவருவதாக பொதுமக்களால் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அண்மையில் ஆனைக்கோட்டையில் கிட் காட் முகவர் நிலையத்தில் நூறு ரூபா பெறுமதியுடைய கிட் காட் ஒன்றை வாங்கிய வாடிக்கையாளர் ஒருவர், அதன் இரகசிய இலக்கமான 1452 9353 1479 என்ற இலக்கத்தைத் தனது டயலொக் கைத்தொலைபேசியில் பதிவுசெய்தபோது இரகசிய இலக்கத்தை மட்டும் சரியாகச் சொல்லிவிட்டு பணப்பெறுமதியைக் கூறவில்லை.

அந்தப் பாவனையாளர் மீண்டும் அந்த இலக்கத்தைப் புகுத்திய போது - "இந்த அட்டை உபயோகிக்கப்பட்டுள்ளது மன்னிக்கவும் உங்களது வாடிக்கையாளரை நாடவும்" என்று தகவல் வழங்கப்பட்டது. எனவே இப்படி மோசடி செய்து பணம் சம்பாதிக்கும் கிட் காட் விற்பனையாளர் குறித்து விழிப்பாக இருக்குமாறு பொது மக்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர். (100)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### அகவை இரண்டு



பெயர் : சு.சதுர்ஜன்
முகவரி : உடுப்பிட்டி

### அகவை ஏழு




பெயர் : த.கம்ஷிகா
முகவரி : சுன்னாகம்.

### அகவை எட்டு



பெயர் : சி.துவாரகன்
முகவரி : அரியாலை.




# தென்னையில் ஊடுபயிர்

## ஊடுபயிரிடுதல் என்பது காப்புறுதி செய்வது போன்றது

சிறிய நிலப்பரப்பில் மேற்கொள்ளப்படும் தென்னைச் செய்கையில், கிடைக்கும் வரு வாய் குறைவாகும். மேலும், தென்னை பயிரிட்டதில் இருந்து பயனைப் பெற 5 முதல் 10 ஆண்டுகளா கிறது. எனவே தென்னைச் செய்கையை மட்டுமே முழுமையாக நம்பி இருக்கும் சிறு விவசாயிக ளுக்கு இந்தக் காலகட்டத்தில் வருமானம் ஏதும் கிடைக்காது.

இதனை ஈடுசெய்யவே ஊடுபயிரிடும் முறை நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது. காய்ப்புக்கு வந்த தென்னைத் தோட்டங்களிலும் ஊடுபயி ரிடுவதன் மூலம் அதிக இலாபத்தைப் பெறமுடி யும்.

**ஊடுபயிரிடுதல்**

தென்னை மரங்களில் இடைவெளியில் ஓராண்டு அல்லது ஈராண்டு காலப் பயிர்க ளைப் பயிர் செய்வதே ஊடுபயிரிடுதல் என அழைக் கப்படுகிறது.

**ஊடுபயிரிடுதலை நிர்ணயிக்கும் அல்லது பாதிக்கும் காரணிகள்**

- பயிர் தேர்வுசெய்தலும், திட்டமும்.

மண்டல ரீதியாக மழையின் கால அளவு மற்றும் பரவல் அளவு, மொத்த மழையின் அளவு, மண்ணின் வகை ஆகியவற்றைப் பொறுத்தே ஊடுபயிர்களைத் தேர்வு செய்வது மற்றும் பயிர்த் திட்டமும் அமைகிறது.

இந்தப் பயிர்களைத் தேர்வு செய்யும் போது நாம் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சம் என்ன வெனில், ஊடுபயிர்கள் தென்னையின் இலா பத்தைப் பாதிக்கக்கூடாது. மேலும் தென்னை ஊடுபயிர்களுக்குத் தேவையான உரப் பொருட் கள் மற்றும் நீர் போதுமான அளவு கொடுப்பதன் மூலம் சீரான பலனைப் பெறமுடியும்.

- ஊடுபயிர் செய்கை செய்வதற்கேற்ற பருவம்.

தென்னையில் சூரியஒளி ஊடுருவுதலின் அடிப் படையில் தென்னையின் வாழ்க்கைப் பருவத்தை மூன்று கால கட்டங்களாகப் பிரிக்கலாம்.

**முதற்பருவம்:**
நட்டது முதல் ஏழு ஆண்டுகள் வரை -

தென்னை முழு வளர்ச்சியடைந்து, காய்ப்புக்கு வர 7 முதல் 10 ஆண்டுகளாகின்றன. நீர்ப்பாசன வசதியுள்ள செய்கையில் ஐந்து முதல் ஏழு ஆண்டுக ளில் தென்னை காய்க்கும் பருவத்தை அடைகிறது.

இந்தப் பருவத்தில் மரங்களின் இடைவெளியில் அதிகளவு சூரியஒளி கிடைக்கிறது. இந்தத் தருணத்தில் ஊடுபயிர் செய்து, நல்ல பலனைப் பெறமுடியும்.

இந்தக் காலத்தில் ஓராண்டு அல்லது ஈராண்டு களில் பலனைத் தரக்கூடிய பயிர்களை மட்டுமே பயிர் செய்யவேண்டும். இந்தக் காலத்தில் பல் லாண்டு பயிர்ச்செய்கை செய்யக்கூடாது. இவை பிற்காலத்தில் தென்னை மரங்களின் வளர்ச்சியைப் பாதிக்கும்.

**இரண்டாவது பருவம்:**
8 முதல் 20-25 ஆண்டுகள் வரை -

இந்தக் காலகட்டத்தில் தென்னை முழுவளர்ச்சி அடைந்து விடுகிறது. இந்தப் பருவத்தில் தென்னை மரங்களின் இடைவெளியில் சூரியஒளி குறைவாக விழுவதால், இலாபகரமாக ஊடுபயிர்களைச் செய்ய முடியாது. எனவே, இந்தப் பருவத்தில் ஊடுபயிர்களை பயிர்செய்வதைத் தவிர்க்கவேண்டும்.

**மூன்றாவது பருவம்:**
20-25 ஆண்டுகளுக்குப் பின்பு -

இந்தத் தருணத்தில் தென்னை மரத்துக்கே உரித்தான இலை பரவல் அமைப்பு மூலம், அதிக ஒளியானது ஊடுருவி, தென்னை மரங்களின் இடைவெளியில் கிடைக் கிறது. இந்தக் காலகட்டத்தில் ஓராண்டு, ஈராண்டு மற்றும் பல்லாண்டு பயிர்களை இலாபகரமாகச் செய்ய லாம்.

- தென்னையின் வேர்பரவல் அமைப்பு.

ஆராய்ச்சி முடிவுகள் 2 மரங்களுக்கான இடை வெளி 7.5 மீற்றர் x 7.5 மீற்றர் (25அடி x 25அடி) போதுமானது என்று தெரிவிக்கப்படுகிறன.

ஆனால், தென்னை மரத்தின் 90 வீதத்துக்கு மேற் பட்ட வேர்களானது 1.8 மீற்றர் சுற்றளவு (அதாவது 6 அடி) வரை மட்டுமே பரவியுள்ளது. எனவே, 1.8 மீற்றருக்கு அப்பால் உள்ள




பகுதிகளை ஊடுபயிர் செய்வ தற்கு முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். இதனால் தென்னை மற்றும் ஊடு பயிர்களுக்கிடையே போட்டி தவிர்க்கப்படுகிறது.

- உற்பத்தி மற்றும் வருமானத்தை அதிகரித்தல்

ஊடுபயிரிடுதல் என்பது காப்புறுதி செய்வது போன் றது. தென்னை மரங்களின் விளைச்சல் அவ்வப்போது குறைதல், தேங்காயின் விலையில் ஏற்றத் தாழ்வுகள் மற்றும் நோய், பூச்சித் தாக்குதல் போன்ற காரணங்க ளால் தென்னையிலிருந்து வருமானம் குறைவதோடு மட்டுமல்லாமல், சில நேரங்களில் நட்டமும் ஏற்படக் கூடும். இதனைத் தவிர்க்க ஊடுபயிரிட்டு, நட்டத்தைச் சமாளிக்கலாம். ஊடுபயிரிடுவதன் மூலம் ஒரு ஹெக்ரேயர் நிலப்பரப்பின் மொத்தப் பயிர் உற்பத்தி திறன் அதிகரிக்கிறது.

# நெல்லின் விதைத்தரம் அறிய உப்புக் கரைசல் பரிசோதனை!



விவசாயிகளால் சேமித்து வைக்கும் நெல் விதைகளின் எடை அவற்றின் சேமிப்புக் காலம், இடம், சூழ்நிலை மற்றும் பூச்சி, பூஞ்சணங்களால் மாறுபடுகிறது.

அதிக வயதான விதைகள் காலப்போக்கில் பயன்படுத்திய 'பட்டரி' போன்று முளைப்புத்திறனும், வீரியமும் குறைந்துவிடும்.

எனவே, விதைத்தரம் உயர்த்துதல் அவசியமானதாகும். அதற்காகப் பின்வரும் நடைமுறையைப் பின்பற்றுவதன் மூலம் சிறந்த விதைநெல்லைப் பெறமுடியும்.

**தேவையான பொருட்கள்**
1 லீற்றர் நீர்
2 கிலோ உப்பு
நல்ல முட்டை
கறண்டி
தரம் பிரிக்கப்படாத விதை

**உப்புக் கரைசல் தயாரித்தல்**

- 10 லீற்றர் நீரில் சுமார் 2 கிலோ கல் உப்பைக் கரைக்கவும்.
- இந்தக் கரைசலில் ஒரு முட்டையைப் போட்டால், முட்டை நீருக்கு மேலே சிறிதளவு மட்டுமே தெரியும்படி மிதக்க வேண்டும்.
- இந்தக் கரைசலில் விதைகளைப் போட்டால் நல்விதைகள் மூழ்கும். தரக்குறைவான விதைகள் மிதக்கும்.
- மிதக்கும் விதைகளை அகற்ற வேண்டும்.

**பயன்கள்**
முதிர்ச்சி அடையாத மற்றும் பதர் விதைகளை நீக்கலாம். முதிர்வடைந்த தரமான விதைகளைப் பெறலாம்.


# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 60/= | 70/= | 80/= | 50/= | 60/= | 60/= | 40/= |
| வெண்டிக்காய் | 25/= | 30/= | 40/= | 30/= | 30/= | 35/= | 50/= |
| உருளைக்கிழங்கு | 80/= | 70/= | 70/= | 80/= | 90/= | 90/= | 80/= |
| கத்தரிக்காய் | 25/= | 30/= | 40/= | 30/= | 30/= | 35/= | 30/= |
| பாகற்காய் | 80/= | 70/= | 80/= | 70/= | 70/= | 60/= | 50/= |
| கரட் | 50/= | 50/= | 60/= | 50/= | 40/= | 60/= | 50/= |
| பீற்றூட் | 40/= | 30/= | 50/= | 35/= | 50/= | 40/= | 40/= |
| முருங்கைக்காய் | 150/= | 150/= | 150/= | 150/= | - | 50/= | 200/= |
| வெங்காயம் | 50/= | 35/= | 40/= | 50/= | 60/= | 60/= | 50/= |
| பச்சை மிளகாய் | 40/= | 45/= | 50/= | 50/= | 45/= | 80/= | 80/= |

## தொழில்மலர்

# நவீன வர்த்தகத்திலும் தன்னைத் தக்கவைத்துள்ள காசோலை வணிகம்

(சென்றவாரத் தொடர்ச்சி...)




மேலே காட்டப்பட்டுள்ள கோடிடல்கள் அவ்வாறான கோடிட்ட காசோலை காசாக மாற்றப்படுவதற்கு ஒரு வங்கிக் கணக்கு மூலமே கையளிக்கப்பட வேண்டும் என்பதைக் காட்டுகிறது.


'கைமாற்றத்தகாதது' எனும் சொற்களைக் கொண்ட கோடிடலானது - அவ்வாறான காசோலை ஒரு வங்கிக் கணக்கு மூலமாகக் கையளிக்கப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறான கோடிடலைக் கொண்ட ஒரு காசோலை, மற்றொருவருக்கு மாற்றீடு செய்யப்படும்போது மாற்றீடு செய்வோர் அதற்குச் சட்ட முறையான உரித்துடையவராவார் என்பதனை, மாற்றீடு பெறுவோர் உறுதி செய்து கொள்ள வேண்டும் என்பதையும் குறிக்கிறது.

மாற்றீடு செய்வோர் -சட்டமுறையான உரிமைக்கு உரித்துடையவராக மாட்டார். கொடுணி கணக்குக்கு மட்டும் எனும் சொற்களையுடைய கோடிட்ட ஒரு காசோலையானது - கொடுணியின் கணக்கில் வைப்புச் செய்வதன் மூலமாக மட்டுமே காசாக மாற்றப்படலாம்.

இவ்வகையான காசோலை ஒன்று வழங்கப்படுமுன் - கொடுணி ஒரு நடப்புக் கணக்கு வைத்திருக்கிறாரா என்பதைக் கண்டு கொள்வது முக்கியமாகும்.

காசோலையின் குறுக்கே வரையப்பட்ட ஒத்திசைவான கோடுகளுக்கிடையே - வங்கி ஒன்றின் பெயர் எழுதப்பட்டிருக்கும் போது, அது ஒரு சிறப்புக் கோடிடலாகக் கொள்ளப்படும்.

அந்தக் காசோலை அதிலே குறிப்பிடப்பட்டுள்ள வங்கியின் கணக்கொன்றில் மட்டுமே வைப்புச் செய்யப்பட வேண்டும்.




1 ஆம் இலக்கத்தால் குறிக்கப்படும் சிறப்புக்கோடிடலானது இலங்கை வங்கிக் கிளை ஒன்றில் வைக்கப்பட்டுள்ள ஒரு நடப்புக் கணக்கால் அந்தக் காசோலை காசாக மாற்றப்பட முடியும் என்பதைக் குறிக்கிறது.

2 ஆம் இலக்கத்தால் குறிக்கப்படும் சிறப்புக் கோடிடலானது - மக்கள் வங்கியில் மட்டுமே வைக்கப்பட்டுள்ள கொடுணியின் கணக்கு மூலம், அந்தக் காசோலை காசாக மாற்றப்பட முடியும் என்பதைக் குறிக்கிறது.

மேலும் அதிலே எழுதப்பட்டுள்ள 'கைமாற்றத்தகாதது' எனும் சொற்களானவை - அவ்வாறான காசோலை ஒன்று மற்றொருவருக்கு மாற்றீடு செய்யப்படும்பொழுது மாற்றீடு செய்வோர் சட்டமுறைப்படி அதற்கு உரித்துடையவரா என்பதை மாற்றீடு பெறுவோர் கண்டறிந்து கொள்ள வேண்டும்.

3 ஆம் இலக்கத்தால் குறிக்கும் சிறப்புக் கோடிட்ட காசோலையானது - இலங்கை வங்கியின் கன்னாதிட்டிக் கிளையில் வைக்கப்பட்டிருக்கும் கொடுணியின் கணக்கிலேயே வைப்புச் செய்யப்பட வேண்டும் என்பதைக் குறிக்கிறது. இது ஏனைய காசோலைகளைவிட மேலதிக பாதுகாப்பளிப்பதை உறுதிப்படுத்துவனவாகும்.

கொடுணியொருவர் கோடிட்ட காசோலையை வங்கியில் கொடுத்து உடனடியாகக் காசாக மாற்றுவதற்கு விரும்புபவராயின், அந்தக் காசோலை எடுப்போர் மூலம் அந்தக் கோடிடலை ரத்துச் செய்யுமாறு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கோடிடல் ரத்துச் செய்யப்பட்டது, காசு கொடுக்கவும் எனும் சொற்கள் - காசோலையின் தலைப்பில் எழுதப்பட்டு, வரைவோரின் கையொப்பமும் அதனைத் தொடர்ந்து பெறப்பட்டிருந்தால், கோடிடல் ரத்துச்செய்யப்பட்டுவிடும்.

சாதாரணமாக ஒரு காசோலை - அது வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்கு வலிமையுடையதாகும். பெரும்பாலான அரச நிறுவனங்கள் வழங்கும் காசோலைகளின் வலிமைக்காலம் முப்பது நாட்களாக வரையறுக்கப்பட்டுள்ளது.

ஒரு காசோலையின் வலிமைக்காலம் முடிவந்து விட்டால், வரைவோரால் அந்த வலிமைக்காலத்தை நீடிக்கமுடியும். வலிமைக்காலம் முடிவடைதல், வரைவோர் கணக்கிற் பணம் குறைவாயிருந்தால், கொடுப்பனவை நிறுத்தி விடும்படி வங்கிக்கு அறிவுறுத்தல் செய்தல், புறங்குறிப்பை முறையாகச் செய்யாதிருத்தல், தவறாகக் காசோலையை எழுதியிருத்தல், ஆகியவற்றுள் எந்தக் காரணத்தையிட்டும் ஒரு வங்கியானது - காசோலை ஒன்றுக்கு மதிப்பளிப்பதை மறுக்கலாம்.

காசோலையில் இன்னொரு வகை 'பயணிகள் காசோலை'யாகும். பயணியொருவர் வெளிநாட்டில் செய்த வியாபார கொடுக்கல், வாங்கல்களுக்குக் கொடுப்பனவு செய்வதற்குத் தமது சொந்த நாட்டிலுள்ள சட்ட இறுமதியைப் பயன்படுத்த முடியாது என்பதால், அவர் தம் நாட்டுப் பணத்தை ஒரு வங்கியில் வைப்புச் செய்து, அதற்குப்பதிலாக மற்றொரு நாட்டுப்பணத்தை, உதாரணமாக - ஸ்ரேலிங்பவுண், யூரோ, அமெரிக்க டொலர் என்பவற்றைப் பயணிகள் காசோலைகளாகப் பெறலாம்.

பல்வேறு பெறுமானங்களில் வளங்கப்படும் இந்தப் பயணிகள் காசோலையைப் பெறும் ஒருவர் - தான் பெறும் ஒவ்வொரு காசோலையின் முகப்பிலும் வங்கி அலுவலரின் முன்னிலையில் தமது கையொப்பத்தை இட வேண்டும்.

அவற்றை வெளிநாட்டுக்கு எடுத்துச் சென்ற பின்னர் - அவர் அவற்றை அந்த நாட்டிலுள்ள எந்தவொரு வங்கியிலும் கையளித்து, அவற்றின் பின் பக்கம் தமது கையொப்பமிட்டு, அந்த நாட்டுப் பணத்தைப் பெறமுடியும்.

இதேபோல் பயணிகள் காசோலைகளைக் கடைகளிலிருந்து பொருட்களை கொள்வனவு செய்வதற்கோ அல்லது விடுதிச் செலவுக்குப் பணம் செலுத்துவதற்கோ பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

வெளிநாட்டுக்குப் பயணிக்கும் ஒருவர் - பெருமளவான நாணயங்களையும், பொருட்களையும் எடுத்துச் செல்லும் போது கள்வராலும், எதிரிகளாலும் உண்டாகும் அபாயங்களைத் தடுப்பதற்கு அல்லது குறைப்பதற்கு பயணிகள் காசோலையைப் பெற்றுச் செல்லுதல் ஒரு பாதுகாப்பான முறையாகும்.

'வங்கி வரையியல்' என்பது பணப் பரிமாற்றத்தில் ஒரு முக்கிய இடம் வகிக்கிறது. நெடுந்தூரத்தில் அல்லது வெளிநாட்டில் வாழும் ஒரு விநியோகத்தருக்கு அல்லது மற்றுமொரு கொடுணிக்கு (Payee) வங்கிகள் வாயிலாகப் பணம் செலுத்துவதற்குப் பின்பற்றப்படும் ஒரு கொடுப்பனவு ஊடகம் வங்கி வரை யியல் (Bank Draft) ஆகும்.

பணம் அனுப்புவோரின் அறிவுறுத்தலின் பெயரில், அவரது வங்கியானது உள் நாட்டிலுள்ள அல்லது வெளி நாட்டிலுள்ள தனது கிளை வங்கி ஒன்றுக்கு அல்லது நிருப வங்கி ஒன்றுக்கு கொடுணி தொடர்பாகக் குறிக்கப்பட்டுள்ள பணத்தொகையைக் கொடுப்பதற்கு, அறிவுறுத்தல் அடங்கிய ஒரு கட்டளையை அனுப்பும்.

பணம் அனுப்புவோர் - வங்கி வரையியலின் பெறுமானத்தை வங்கியிடம் செலுத்த வேண்டும். குறிப்பிட்ட வங்கியானது - வங்கி வரையியலைப் வழங்குவதற்குப் பணம் அறவிடும்.

இவ்வாறு பெறப்பட்ட வங்கிவரையியல் பணம் அனுப்புவோரால் கொடுணிக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்படுகிறது. கொடுணி அதைப் பெற்று, குறிப்பிட்ட வங்கியிடம் ஒப்படைத்து அதனைக் காசாக மாற்றிக் கொள்ளலாம்.

இன்றைய நவீன வணிகத்தில் (Credit Card) செலவு அட்டை ( Debit Card) வரவு அட்டை, (e- Bank ) மின் வங்கி (e- Money) மின் பணம் என (e- Commerce) மின்வர்த்தகத்தில் ஓடிக் கொண்டிருக்கின்ற பொழுதும், காசோலை வணிகம் தனது களையை இழக்காது தொடர்ந்து நகர்ந்து சென்று கொண்டே இருக்கிறது. இதற்கு இது கொண்டுள்ள பாது காப்புத் தன்மையும் இலகுவாகக் கையாள முடிதலுமே காரணமாகும்.

முற்றும்.

எஸ்.ஜெயா

# தொழிலில் வெற்றிபெற... சில குறிப்புகள்



☞ ஒரு தொழில் முயற்சியாளன் - ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு முன்னர், அந்த வேலை எத்தகையது, அந்தத் தொழிலைச் செய்வதற்கு நாம் எந்த அளவுக்குப் பொருத்தமானவர், எந்த அடிப்படையில் அந்தத் தொழில் எமக்குப் பொருத்தமானது, அதனைச் செய்தால் நாம் எந்தவகையில் வெற்றிபெறுவோம், நமக்கு எந்த அளவுக்குப் பயன்தரும் என்பதையெல்லாம் ஆராய்ந்து, தெளிந்த பின்தான் எண்ணிய வேலையைத் தொடங்குதல் வேண்டும்.

☞ மேலும் ஒரு தொழிலைத் தொடங்குமுன், அந்த வேலை எளிதானதா? கடினமானதா? எவ்வளவு முதலீடு தேவைப்படும்? பொருள் எவ்வளவு தேவை? பணியாட்களின் தொகை? வேலையை முடிக்க எவ்வளவு காலம் தேவை? என்பனவற்றையெல்லாம் தெரிந்துகொள்ளவேண்டும்.

☞ இவை எல்லாவற்றுக்கும் மேலாக நாம் செய்யும் தொழிலில் முழு விருப்பம் இருக்கவேண்டும். அந்தத் தொழிலைப் பற்றிய ஆய்வும், இடைவிடாத முயற்சியும், முழுமையான ஈடுபாடும் இருக்கவேண்டும்.

☞ சில சந்தர்ப்பங்களில், தொழிலின் ஒரு பகுதியோ அல்லது சிலவேலைகளோ தெரியாமல் இருக்கலாம். எனவே, அந்த வேலை எமக்குத் தெரியவில்லையே என்று சோர்ந்துவிடாமல், தெரிந்த அளவுக்கு முழு ஈடுபாட்டுடன், கடுமையாக முயற்சிசெய்தல் வேண்டும்.

☞ தொழிலைத் தொடங்குமுன் காலம், நேரம் அறிந்து தொடங்கவேண்டும். மழைக் காலத்தில் உப்பு விற்கச் செல்லவதுபோல் இல்லாமல் காலத்துக்கேற்ற, தேவைக்கேற்ற வேலையும், அதற்கேற்ற கருவிகளும் கொண்டுசெய்தல் வேண்டும். அடுத்து, வேலைக்கேற்ற இடத்தை முன்பே தேர்ந்தெடுத்துக்கொள்ளவேண்டும்.

☞ அனுபவம், ஊக்கம், முயற்சி உடையவர்களையே பணிக்குத் தேர்ந்தெடுக்கவேண்டும். எவ்வளவு பழகியவரானாலும், அந்த வேலைக்குரிய அறிவு இல்லாதவரைத் தவிர்ப்பதே நல்லது.

☞ வெற்றியையே எப்பொழுதும் எதிர்பார்க்கக் கூடாது. வெற்றியும், தோல்வியும் மாறி மாறிவரும். தோல்வி வந்தால், அதற்கான காரணத்தைக் கண்டு பிடித்து, அதைப் போக்குவதற்குத் தெரிந்துகொள்ள வேண்டும்.

☞ எவ்வளவுதான் தோல்வி வந்தாலும், தொழில் நேர்மையை இழக்கக்கூடாது. தவறான செயல்களில் ஈடுபடுவது தற்காலிக வெற்றியைத் தரலாம். ஆனால், அது நிரந்தரமல்ல.

பார்த்துக்கொண்டிருக்கும் தொழிலில் எத்தனையோ வகையில் பின்னடைவு ஏற்படலாம். எதுவரினும் தொடங்கிய பணியில் உறுதி தளராமல் மேலும், மேலும் முயற்சியோடு உழைக்கவேண்டும். ◆

# பெரும் போர் அழிவுகளிலிருந்து மக்களைக் காத்தவர்கள் போராளிகள்

## அரச அதிபர் இராசநாயகம் தெரிவிப்பு

கிளிநொச்சி

கிளிநொச்சியில் ஏற்பட்ட பெரும் போர் அழிவுகளிலிருந்து மக்களைக் காத்தவர்கள் போராளிகளே என கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

கரைச்சி பிரதேசசபைக்குரிய புதிய கட்டடத்தைத் திறந்துவைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் உரை நிகழ்த்துகையில் -

கிளிநொச்சி மண்ணில் எறிகணைகள், குண்டுகள் மூலம் பெரும் அவலங்களைச் சந்தித்துள்ளோம். எமது அரச செயலகத்துக்கு முன்னால் இடம்பெற்ற குண்டு வீச்சில் 6 பேர் உயிரிழந்ததைப் பார்த்திருக்கிறோம்.

கிளிநொச்சி மண்ணிலிருந்து இடம்பெயர்ந்து நீண்ட நாட்கள் வாழ்ந்திருக்கிறோம். ஓலைக்குடிசைகளிலும், மண் கட்டடங்களிலும் எமது அலுவலகங்களை நடத்தியுள்ளோம்.

இன்று அந்த நிலையிலிருந்து மாறி, தற்காலிகமாக ஏற்பட்டிருக்கும் அமைதிச் சூழலில் எமது மக்களின் பணிக்கென கட்டடம் ஒன்றைக் கட்டி, திறப்பு விழா செய்யும் நிலையில் உள்ளோம். இவை எதனைக் காட்டிநிற்கிறது.

பீனிக்ஸ் பறவைகள் தொடர்ந்து முயற்சிப்பதுபோல, தமிழ் மக்களாகிய நாம் அழிவுகளிலிருந்து மீண்டெழுந்துள்ளோம். இந்த நிலை தொடர்ந்து இருப்பதற்காக எல்லோரும் பாடுபட வேண்டும்.

பெரும் அழிவுகளிலிருந்து நாம் மீண்டெழுந்து நிற்கிறோம். இந்த வழிகளில் இருந்து எம்மைக் காத்தபோராளிகளை நினைவுகூர வேண்டும். இந்த மண்ணிலே வாழும் நிலைமையை உருவாக்கியவர்கள் அவர்களே.

அந்த வகையில் மக்களுக்குச் சேவை செய்யக்கூடிய புதிய கட்டடங்களைத் திறந்துவைத்துள்ளோம். இந்தக் கட்டடங்கள் மக்களுக்குப் பணியாற்றவே உள்ளன. ஒவ்வொரு பணியாளர்களும் அர்ப்பணிப்புடன் இந்த மண்ணுக்குப் பணியாற்றவேண்டும்.




எமது மாவட்டத்தில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையைக் கருத்திற்கொண்டு, சகல அரச பணியாளர்களும் பொறுப்புணர்வுடன் பணியாற்றும்போது தான் எமது மாவட்டம் அபிவிருத்தி அடையும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் கரைச்சி பிரதேசசபையின் விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தன் தலைமையில் பிற்பகல் 12.30 மணிக்கு இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் பொதுச்சுடரை தமிழீழ நிர்வாகசேவைத் துணைப் பொறுப்பாளர் ராதை ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக்கொடியை கிளிநொச்சி பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் அருள் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வின் மங்கள விளக்கை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், உதவி அரச அதிபர் சுலோஜினி மற்றும் அரச அதிகாரிகள் ஏற்றிவைத்தனர். இந்த நிகழ்வின் கட்டடப் பெயர்ப் பலகையை தமிழீழ நிர்வாக சேவைத் துணைப் பொறுப்பாளர் ராதை திரை நீக்கம் செய்துவைத்தார்.

தொடர்ந்து கரைச்சிப் பிரதேசசபை அலுவலகக் கட்டடத்தை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வின் ஆசியுரையை கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய இரத்தினேஸ்வரக் குருக்கள், அருட்தந்தை தேவசகாயம் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வின் சிறப்புரையை தமிழீழ நிர்வாகசேவையைச் சேர்ந்த ராதை, கிளிநொச்சி பிரதேசப் பொறுப்பாளர் அருள் ஆகியோர் நிகழ்த்தினர். இந்த நிகழ்வின் நன்றியுரையை பிரதேசசபைச் செயலாளர் நிகழ்த்தினார். (ந)

## வெடிபொருட்களுடன் மன்னாரில் படகு பிடிபட்டது

மன்னார்

மன்னாரில் ஜெலிக்னைட் குச்சிகள் மற்றும் வெடிக்கவைக்கும் உபகரணங்கள் இருந்த டிங்கி படகொன்றை, கடற்படையினர் கைப்பற்றியுள்ளதாக அறிவித்துள்ளனர்.

மன்னார் சவுத்பார் கடற்பிரதேசத்தில் ஜெலிக்னைட் குச்சிகள் 390, வெடிக்கவைக்கும் தடிகள் 5, ஜி.பி.எஸ் கருவி ஒன்றும் மற்றும் 55 லீற்றர் மண்ணெண்ணெயுடன் டிங்கிப் படகொன்றை கடற்படையினர் கைப்பற்றியதுடன், அந்தப் படகில் இருந்த சேகு அன்ரன் என்பவரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரையும், கைப்பற்றப்பட்ட பொருட்களையும் கடற்படையினர் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சிங்களக் காடையர்களின் அடாவடித்தனத்தை கண்டித்து அரசசார்பற்ற நிறுவனம் அறிக்கை

கிளிநொச்சி

திருகோணமலை - சேருநுவர, அலிஒலுவ ஆகிய இடங்களில் சிங்களக் காடையர்கள் மேற்கொண்ட அடாவடித்தனங்களைக் கண்டித்து, அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணியளவில் கிளிநொச்சி அரசசார்பற்ற நிறுவனங்களைச் சார்ந்த பலர் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்திலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு- போர் நிறுத்தக் கண் காணிப்பு அலுவலகத்தைச் சென்றடைந்து.

அங்கு கண்டன அறிக்கை - கிளிநொச்சி போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் இணையத்தலைவரால் கையளிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

மட்டக்களப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அலுவலகம் மீது 13.6.2005 ஆம் திகதி கைக்குண்டு வீச்சில் காயமடைந்த பாக்கியராசா தனபாலன் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை அலிஒலுவ, சேருநுவர பகுதிகளில் தமிழ் மக்கள் மீது சிங்களக் காடையர்களால் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வாகனங்கள் தீயிட்டு எரிக்கப்பட்டன. இதனால் அதிலிருந்த படகுகள், கிடுகுகள் எரிந்து சாம்பலாயின.

அத்துடன் சாரதியும் தாக்கப்பட்டுள்ளார். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கெனக் கொண்டு செல்லப்பட்ட பொருட்களே எரியூட்டப்பட்டன.

நிகழ்வைப் பார்வையிடச் சென்ற போர் நிறுத் தக் கண்காணிப்புக் குழுவின் வாகனமும் தாக்கப்பட்டது. இது குறித்த சேத விபரம் தெரியாதுள்ளது .

இவ்வாறான அராஜகச் செயல்களுக்கு அரசும் மறைமுகமாகத் துணைபோவதாக நாம் கருதுகிறோம்.

இந்தக் கண்காணிப்புக் குழு அமைதிக்கும், சமாதானத்துக்குமான ஒரு அமைப்பு என நாம் பார்க்கிறோம். இவர்களுக்குக் கல்லெறிந்து தாக்கியதை மிக வன்மையாக நாம் கண்டிக்கிறோம்.

இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு, இன மத பேதமில்லாது சேவையாற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு ஏற்பட்டிருக்கும் இந்தத் தாக்குதல் சம்பவத்தை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இந்த அடாவடித்தனங்களால் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு ஏற்பட்ட நட்டத்தை அரசு ஈடுசெய்ய வேண்டுமெனவும் கோருகிறோம்.

சிங்களக் காடையர்களின் இவ்வாறான அடாவடித்தனங்கள் சமாதான முயற்சியைக் குழப்புகின்ற நிலையை உண்டுபண்ணுகிறது.

நாடு பூராகவுமுள்ள சகல மக்களுக்கும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் பாதுகாப்புடன் செயற்படுவதற்குரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென, அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### ஜீன் 23

**1696:** முதன் முதலாக மாலைத் தினசரி வெளிவந்தது. "டாக்ஸ் நியூஸ் லெட்டர்" (DAWKS NEWS LETTER) என்ற இந்த மாலைப் பத்திரிகை - கையினால் எழுதியதைப் போலவே அச்சிடப்பட்டு வெளிவந்தது.

**1757 :** வங்காள நவாப்பான சீராஜுத் தௌலாவுக்கும், பிரித்தானியர்களான ரொபேட் கிளைவ், அட்மிரல் வார்ட்சன் ஆகியோர் தலைமையில் வந்த படையினர்களுக்கும் காலை 7 மணியளவில் ஆரம்பித்தபோர் மாலை 4 மணிக்கிடையில் முடிவுபெற்றது. இது இந்தியாவில் ஆங்கிலேய ஆதிக்கம் நிலைபெற உதவி நின்றது. வரலாற்றாசிரியர்கள் இந்தப் போரை "பிளாசி போர்" எனக் குறிப்பிடுகின்றனர். 18 ஆயிரம் குதிரைப் படைகளையும், 50 ஆயிரம் காலாட் படைகளையும் கொண்ட சிராஜுத் தௌலாவின் படைகளை, வெறும் 3000 வீரர்களை மட்டுமே கொண்ட ஆங்கிலப் படையினர் வென்றதற்கு, சிராஜுத் தௌலாவின் படைத்தளபதி மீர் ஜாபக் செய்த பெரும் துரோகமே காரணமாகும்.

**1789 :** பிரான்சில் மூன்று பிரிவினரும் இணைந்து ஏற்படுத்திய சட்டசபையைக் கலைக்கும்படி மன்னர் 16 ஆம் லூயிஸ் கட்டளையிட்டார். இந்தக் கட்டளையை எடுத்துவந்த தூதரிடம் சட்டசபையின் பிரதிநிதிகளுள் ஒருவரான கவுண்டி பிராப்யூ என்பவர் "மக்கள் விருப்பத்தின்படி நாங்கள் இங்கு அமர்ந்திருக்கிறோம். துப்பாக்கிகளால்தான் எங்களை இங்கிருந்து அகற்றமுடியும் என்று உங்கள் மன்னரிடம் போய்ச் சொல்லுங்கள்" எனச் சொல்லியனுப்பினார்.

**1908 :** ஈரானில் ஷாமுகம்மதலி ரஷ்ய உதவியுடன் புரட்சி செய்து ஆட்சியைக் கைப்பற்றியதுடன் முந்தைய அரசியல் சட்டத்தையும் நீக்கிவிட்டு, இராணுவச் சட்டத்தைக் கொண்டுவந்தது.

**1917 :** வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட நெருக்கடி நிலை காரணமாக ஒஸ்ரியாவின் புதிய பிரதமர் செய்ட் லெர் பதவி விலகினார்.

◆ : இங்கிலாந்து மன்னர் ஐந்தாம் ஜோர்ஜ் முன்னிலையில் ஐந்தாவது கடற்படையணியின் ஒத்திகை நடத்தப்பட்டது.

**1919 :** நேச நாடுகளது "உயர் போர்ச்சபை" விதித்த கால அவகாசம் முடிவதற்கு இருபத்தைந்து நிமிடங்களே இருக்கையில், ஜேர்மனி சமாதான ஒப்பந்தத்தில் தமது எதிர்ப்பை பதிவுசெய்து ஒப்பமிட ஒத்துக்கொண்டது.

**1934 :** தமது உள்நாட்டு விடயங்களில் இத்தாலி தலையிடுவதாகக்கூறி கடுமையான எதிர்ப்பை அல்பேனியா அரசு தெரிவித்துவந்த நிலையில், இத்தாலிய கடற்படைப் பிரிவு அல்பேனியாவின் துரஸ்ஸா துறைமுகத்துள் நுழைந்தது. அல்பேனியா அரசு உடனடியாக அடிபணிந்ததுடன், தமது பகுதிகளில் குடியேற்றம் அமைப்பதுடன் வேறு பல உரிமைகளையும் இத்தாலிக்கு வழங்கியது.

**1939 :** அயர்லாந்து அரசு அயர்லாந்துக் குடியரசுப் படையை சட்டவிரோத தீவிரவாதிகள் அமைப்பு என்று அறிவித்தது.

◆ : துருக்கிக்கும் பிரான்ஸுக்கும் இடையே உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. இந்த உடன்படிக்கையின் விளைவாக பிரான்ஸ் தனது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்த "ஹாட்டே" குடியரசை துருக்கிக்கு வழங்கியது.

**1943 :** பிரான்ஸ் இந்தோனேஷியாவிலுள்ள தனது குடியேற்றங்களை ஜப்பான் இராணுவத்தினரிடம் கையளித்தது.

**1948 :** ரஷ்யாவுக்கும் அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா போன்ற நாடுகளுக்கும் இடையே நிலவிவந்த பனிப்போர் தொடங்கியது. அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளது ஆதிக்கத்தின் கீழ் இருந்த மேற்கு பேர்லினுக்கு எந்த விதமான பொருட்களையும் தரைமார்க்கமாகக் கொண்டுசெல்வதையோ அல்லது கொண்டுவருவதையோ அனுமதிக்கமுடியாது என ரஷ்ய இராணுவம் அறிவித்தது. நீர்வழிப் போக்குவரத்தும் தடைசெய்யப்பட்டது. இதனால் 23 லட்ச மேற்கு பேர்லின் மக்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் மேற்குறிப்பிட்ட நாடுகள் ஏறக்குறைய ஒருவருட காலத்துக்கு விமானம் மூலம் ஏற்றி இறக்கின.

**1967 :** அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சனும், ரஷ்யப் பிரதமர் கோசிஜினும் நியூ ஜெர்சியில் கிளாஸ்பாரோ மாறிலன் கல்லூரியில் பத்துமணி நேரமாகச் சந்தித்துப் பேசியும் அணுக்கட்டுப்பாடு, வியட்நாம் போர் போன்ற விடயங்களில் எந்தவிதமான தீர்மானத்துக்கும் வரவில்லை.

**1980 :** இந்தியாவின் புதுடெல்கியில் ஏற்பட்ட விமான விபத்தில் இந்திராகாந்தியின் இளைய மகன் சஞ்சய்காந்தி பலியானார்.

◆ : வியட்நாமியப் படைகள் கம்போடியாவில் இருந்து தாய்லாந்து மீது படையெடுத்தது.

**1985 :** எயர் இந்தியாவின் "சாம்ராட் கணிஸ்கா" என்ற விமானம் அயர்லாந்தின் அருகே பறந்து கொண்டிருந்தபோது, அதில் வைக்கப்பட்டிருந்த நேர வெடிகுண்டு வெடித்தமையால் 326 பயணிகளுடனும், 22 ஊழியர்களுடனும் அத்திலாந்திக் கடலில் சிதறி விழுந்தது.

**1988 :** துருக்கியில் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக "கடாக்" என்ற கிராமம் முற்றாகப் புதையுண்டது.

**1994 :** வட அத்திலாந்திக் அமைப்பில் ரஷ்யாவும் ஒப்பமிட்டு உலகை ஆச்சரியப் படவைத்தது.

◆ : லக்ஸம்பேர்க் தேசிய தினம்.

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்*
*குற்றமே கூறி விடும்!*

திருக்குறள்

# நமது நோக்கு

## தேர்தலுக்கு முகங்கொடுக்கத் தயாராகிவரும் தென்பகுதி அரசியல்வாதிகளும், கட்சிகளும்

ஜே.வி.பியின் வெளியேற்றத்துடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் அறுதிப் பெரும்பான்மைப் பலம் வீழ்ச்சியடைந்துள்ளதைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலையானது, ஜனாதிபதி சந்திரிகாவைத் தீர்க்கமான சில முடிவுகளை மேற்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தச் சூழலுக்குள் தள்ளியுள்ளதால், அடுத்துவரும் வாரங்கள் இலங்கை அரசியலில் முக்கியத்துவமான திருப்பங்களைக் கொண்டதாகவே இருக்கப் போகின்றதென்பதே அரசியல் நோக்கர்களின் எதிர்பார்ப்பாகும்.

இந்த அரசியல் திருப்பங்கள் எத்தகைய மாற்றத்தைத் தென்பகுதி அரசியல் களத்தில் ஏற்படுத்தப்போகின்றதென்பதை இப்போதைக்கு உடனடியாக விபரிக்க முடியாதநிலை இருந்தாலும் - பொதுத் தேர்தல் ஒன்றுக்கான சாத்தியக் கூறுகள் மிக அதிகளவில் இருக்கிறதாகவே நம்பப்படுகிறது.

கடந்த ஓராண்டுக்கும் மேலாக எந்தவிதமான அர்த்தமுள்ள செயற்பாடுகள் ஏதுமின்றி - சண்டையும் சச்சரவும், முரண்பாடும் மோதலுமாக வரண்ட வெற்று ஆட்சியொன்றை, ஜனநாயகப் பண்புகளுக்கு விரோதமாகவும், அதிகார மமதையுடனும் நடத்திய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற பெயரிலான கொள்கை உடன்பாடுகளற்ற சமாதான எதிர்ப்பாளர்களின் கூட்டணியானது - பொதுக் கட்டமைப்பு என்ற விவகாரத்தில் கருத்தொருமைப்பாடொன்றை எட்ட முடியாது போனதில் அரசின் நாடாளுமன்றத்திலான உறுப்பினர் வலு பெரும்பான்மைப் பலத்திற்குப் போதுமானதாக இல்லாது போய்விட்டது.

இந்த நிலை, இந்த அரசுக்கு அதனது ஆட்சிக்காலம் பூரணமாக நிறைவுறுவதற்கு முன்னமே ஒருநாள் வருமென்பது, ஐ.ம.சு.முன்னணிக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு தேர்தலில் வென்று, ஆட்சியமைக்க முடிவெடுத்த அன்றே தீர்மானிக்கப்பட்ட ஒன்றேயாகும்.

ஆனாலும், அது இவ்வளவு விரைவில் - ஒரு மிகமிகச் சாதாரணமான உப்புச்சப்பற்ற பிரச்சினையையொட்டி நிகழும் என எவரும் எதிர்பார்த்திருக்க முடியாது.

எப்பவோ நிகழவேண்டியது இப்போது நிகழ்ந்துவிட்டது அவ்வளவுதான். சந்தர்ப்பவாதக் கொள்கைகளின் அடிப்படையில் உடன்பாடுகாண்பவர்கள் நீண்டகால உறவுகளைத் தொடர்ந்ததாக அரசியலில் எந்த வரலாறும் கிடையாது.

ஜே.வி.பியினரின் - ஜனாதிபதியைக் குறிவைத்த தொடர் அச்சுறுத்தல்கள், அவமதித்தல்கள் மற்றும் அரசாங்கத்தினுள்ளேயான மேலாதிக்கப் போக்குகள் அனைத்தும் அரசியல் முதிர்ச்சியற்ற அவர்களின் அவிவேகப் போக்கையே இனங்காட்டிவந்த நிலையில், பொதுக்கட்டமைப்பு அவர்களின் சுயத்தை முழுவதும் வெளிப்படுத்திவிட்டது.

இப்போது ஜே.வி.பி அரசுக்குள் ஏற்படுத்தியுள்ள வெற்றிடத்தை உடனடியாக ஏதோ ஒரு வகையில் நிரவுவதற்கு ஆட்சியைப் பலப்படுத்தவும் எந்தவொரு வழியும் ஜனாதிபதிக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

எதிர்க்கட்சியை ஆட்சியமைக்க அழைத்தால் அது ஜனாதிபதியின் பலவீனத்தை அம்பலப்படுத்திவிடும்.

மீண்டும் ஜே.வி.பியினருடன் மறைமுகமாகவேனும் உறவுவைத்துக்கொள்ள முயன்றால், அது அவர்களை மேலும் வலுப்படுத்துவதாக அமைவதுடன் ஜனாதிபதிக்குத் தனிப்பட்ட முறையில் அவமானம் தருவதாகவும் அமைந்துவிடும். இந்த நிலையில் இப்போதுள்ள அரசின் ஸ்திரத்தன்மையானது அரசால் எத்தகைய செயற்பாடுகளையும் உறுதியாக அனுமதிக்கப் போவதும் கிடையாது.

எனவே, புதிய தேர்தல் ஒன்றை நாடு எதிர்கொள்வது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது என்றே கூறவேண்டும். அதனை ஜனாதிபதி தனது கட்சியினருக்கு வெளிப்படையாகத் தெரிவித்துவிட்டுள்ளதுடன் - தேர்தல் ஒன்றுக்கு முகம்கொடுக்கத் தயாராகுமாறும் ஆணையிட்டுள்ளாராம்...!

இதனையடுத்து தென்பகுதி அரசியலில் தேர்தல் ஜுரம் பரவத் தொடங்கிவிட்டதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக இன்னமும் ஒரு உறுதியான முடிவை எடுக்காது வாக்குறுதி மட்டும் வழங்கியபடி காலத்தை இழுத்தடித்து வரும் ஜனாதிபதி, தேர்தலுக்குத் தயாராகுமாறு தனது கட்சிக்காரரைப் பணித்துள்ளமையானது புதிய சந்தேகங்களை ஏற்படுத்துவதாகவுள்ளது.

தேர்தலுக்கு முன் பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட்டால், பேரினவாத பௌத்த சிங்கள சமூகத்தவரின் ஆதரவை இழக்க நேரிடலாம். அல்லது எதிர்ப்பைச் சம்பாதிக்க நேரிடலாம் என்பதால், ஜனாதிபதி அதற்கு முன்னர் அரசைக் கலைக்கும் நிகழ்வை அரங்கேற்ற நினைக்கின்றாரோ என்று எழும் சந்தேகம் நியாயமானதே...!

ஆட்சி கலைக்கப்பட்டால் தேர்தல் முடிந்து புதிய அரசு அமையும் வரையும் பொதுக்கட்டமைப்பு விவகாரத்தை இழுத்தடிக்கலாம் எனவும் அவர் திட்டமிடக்கூடும்.

எதுவானாலும் தள்ளாடும் அரசும் - தடுமாறும் ஜனாதிபதியும் இன்றைய அரசியல் நெருக்கடிக்கு ஒரு முடிவுகாண தேர்தல் ஒன்றை எதிர்கொள்வதைத் தவிர வேறு வழியே கிடையாது. அதைவிட மாற்றுவழிகள் ஜனாதிபதிக்குச் சாதகமானவையாக அமையப்போவதும் கிடையாது. இதுவே இன்றைய அரசியல் சூழலின் யதார்த்த நிலையாகவும் உள்ளது.

# நாடும் நடப்பும்




'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# குற்றச் செயல்கள் பற்றியதல்ல, அவர்களின் கவலையெல்லாம் புலிகளைப் பற்றியதே...!

இலங்கைத் திருநாடு இன்று கொலைகளும் கொள்ளைகளும் மலிந்த நாடாகிவிட்டது. காலையில் புதினப் பத்திரிகைகளைப் பார்த்தால் கொலைகள் பற்றிய செய்திகள் முதற் பக்கத்திலேயே இடம் பெற்றிருக்கும். இந்தச் செய்திகளைத் தொடர்ந்து கொள்ளைகள் பற்றிய செய்திகளே இடம் பிடித்திருக்கும். இதன் பின்னர் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களுக்கு வெளிநாடுகள் கொடுத்த உதவிகளைப் பங்கிட்டுக் கொடுப்பதற்கான நிவாரண சபையை அமைக்காதே என்று கூறும் செய்திகள் ஒரு பக்கம். பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளைப் பங்கிட்டுக் கொடு என்று ஒரு செய்தி மற்றொரு பக்கத்திலும் வெளிவந்திருக்கும். இவைகள் எல்லாவற்றையும் விட ஆட்சி அதிகாரத்துக்காகப் பெரிய அரசியல் கட்சிகள் தங்களுக்குள் போட்டிபோடும் அறிக்கைகளும் கூடச் செய்திகளும் இடம் பெற்றிருக்கும். கொழும்பு ஆங்கில சிங்கள பத்திரிகைகள் விடுதலைப்புலிகளுக்கு பொதுக்கட்டமைப்பில் எந்தப் பங்கும் இருக்கக்கூடாதென்று கூறும் கட்டுரைகளும் கடிதங்களும் இடம் பிடித்துக் கொண்டிருக்கும். இந்த நிலையில் நாட்டின் அமைதியைப் பற்றியோ முன்னேற்றம் பற்றியோ யாரும் கவலைப்படும் செய்திகள் புதினப் பத்திரிகைகளில் இடம் பெற்றிருப்பது அபூர்வத்திலும் அபூர்வமாக இருக்கிறது. நாடு எங்கே போய்க்கொண்டிருக்கிறது? என்று நண்பர் பரமசிவம் கேட்டார்.

கொலை, கொள்ளைகளைத் தடுப்பதற்கும். இந்தச் செயல்களில் ஈடுபடுபவர்களைக் கண்டுபிடிப்பதற்கும் இவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தித் தண்டனை பெற்றுக் கொடுப்பதற்கும் காவல்துறையும் பாதுகாப்புப் படையினரும் நீதி மன்றங்களும் இருக்கின்றனவே. இதற்குமேல் என்ன செய்வது என்று கேட்டேன்.

இரு தினங்களுக்கு முன் கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்குச் சென்று கொண்டிருந்த பயணிகள் வாகனங்களை மன்னம் பிட்டி இராணுவச் சோதனைச் சாவடிக்கு அருகில் தடுத்து நிறுத்திய சீருடை தரித்தவர்கள் பயணிகளிடமிருந்து பணத்தையும் நகைகளையும் கொள்ளையடித்திருக்கின்றனர். மன்னம் பிட்டி சோதனைச் சாவடியில் பாதிக்கப்பட்டவர்கள் முறையிட்ட போதும், அருகேயுள்ள செவனப்பிட்டிய காவல் நிலையத்தில் புகார் செய்த போதும் அவர்கள் இதில் அக்கறை செலுத்தவில்லையென்று பயனிகள் தெரிவித்துள்ளனர். இப்படியென்றால் எப்படி கொலை கொள்ளை களைத்தடுப்பது, குற்றச் செயல்களில் ஈடுபடுவோரைக் கண்டு பிடித்துத் தண்டிப்பது? என்று கேட்டார் பரம சிவம்.

நேற்றுமுன்தினம் கூட கட்டுகாஸ் தோட்டை சகிரா கல்லூரி அதிபரும், உதவியாளரும் வங்கியில் ஆசிரியர்களின் சம்பளப் பணத்தை மாற்றிக் கொண்டு புறப்படுகையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கி முனையில் அந்தப் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்று விட்டனராம். சுமார் பத்து லட்சம் ரூபாய் கொள்ளை போய் விட்டது. பொலிசார் கைவிடப்பட்ட மோட்டார் சைக்கி ளைக் கண்டு பிடித்து விட்டார்களாம். என்று சொன்னேன்.

வடக்கு - கிழக்கில் இது நடந்திருந்தால் புலிகள் மீது கொழும்பு ஊடகங்கள் பழியைப் போட்டிருக்கக் கூடும் இல்லையேல் இனந் தெரியாதவர்கள் கொலை செய்தார்கள், இனந் தெரியாதவர்கள் கொள்ளையடித்தார்கள் என்று செய்தி வெளியிடுவார்கள். குருநகரிலிருந்து கொழும்புக்கு வந்திறங்கிய அப்பாவி இளைஞர்கள் இருவர் அதிகாலையில் சுட்டுக் கொல்லப்பட்டதும், அவர்கள் புலிகளின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்றும், சுட்டவர்கள் கருணா குழுவைச் சேர்ந்தவர்கள் என்றும் கண்ணை மூடிக் கொண்டு செய்தி வெளியிட்டன கொழும்பு ஆங்கிலப் பத்திரிகைகள் இரண்டு. இந்த ஊடகங்களினால் தான் நாட்டில் கொலைகளும், கொள்ளைகளும் அதிகரித்து வருகின்றன என்றே தோன்றுகிறது என்றார் பரமசிவம்.

நாடுபோகும் போக்கைப் பற்றி அரசியல் தலைவர்களோ ஆன்மீகத் தலைவர்களோ சிந்திப்பதாகத் தெரியவில்லை. தமிழ் மக்கள் தமது உரிமைக்காகப் போராடக் கூடாது, விடுதலைப்புலிகள் அமைப்பு இருக்கக் கூடாது விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்ட வேண்டும். தமிழ் மக்களை அடக்கி ஆள வேண்டும் என்பது தான் சிங்கள, பௌத்த மேலாண்மை வாத அரசியல், ஆன்மீகத் தலைவர்களிடம் ஊறிப்போயிருக்கிறதே தவிர நாடு முன்னேற வேண்டும் அமைதி நிலவ வேண்டும் என்ற சிந்தனையே இல்லை என்றேன.

நாட்டில் இன்று நாளும் பொழுதும் தொடர்ந்து நடைபெறும் கொள்ளைகளைப் பார்த்தால் 1971 ஆம் ஆண்டுக்கு முன்னிருந்த நிலைமைதான் நினைவுக்கு வருகிறது. தென்னிலங்கையில் மற்றொரு கிளர்ச்சி தோன்றினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

இதே சமயம் வெளிநாடுகள் மனம் இரங்கிக் கொடுக்கும் உதவிகளைக் கூடக் கொடுக்கவிரும்பாத சிங்கள பௌத்த மேலாண்மை வாதிகளிடமிருந்து இனி எதையும் கேட்டுப் பெறலாமென்றோ ஜனநாயக முறையில் வாதாடிப் பெறமுடியுமென்றோ கனவு கூடக் காணக் கூடாது. அடித்துப் பெறுவதைத் தவிர இனிவேறு வழியில்லை என்று சொல்லிக் கொண்டு நடந்தார் பரம சிவம்.

# ஏன் மதிக்க வேண்டும்!

## வாசகர் நோக்கு

இன்று இலங்கையில் மனித உயிர்கள், உரிமைகள் மதிக்கப்படுவதும் இல்லை; நீதியான தீர்ப்பு விசார ணைகளும் இல்லை; இந்தக் குற்றச்சாட்டை ஆசிய மனித உரிமை நடுவம்கூட ஆதாரத்துடன் கூறியுள் ளது. அந்த வகையில் நாட்டில் கொலை, கொள்ளைகள் ஒரு புறத்தில் தாண்டவமாடும். மறுபுறத்தில் அரசு ஆட்சி அதிகாரங்களைக் கொண்டு நடத்தமுடியாமல் தள்ளாடுகின்றது.

இவற்றுக்கெல்லாம் முக்கிய முதற்காரணம் திறமையற்ற, நேர்மையற்ற, ஆட்சிமுறையே ஆகும். "என்று தமிழர்களை அடக்கி, ஒடுக்கி, நசுக்க நினைத்தனரோ" அன்றே இலங்கையில் தமிழ் மக்கள் சார்புடையவைக்கு நீதிகள் கிடைப்பதில்லை, தமிழ் மக்களுக்கு உரிமையும் இல்லை, நீதியும் இல்லை. பிறகேன் நாங்கள் அவர்களின் ஆட்சிமுறையின்கீழ் இருக்கவேண்டும்.

எம்மை மதிக்காத; எமக்கு உரிமைகள் கொடுக்காத அரசை நாம் ஏன் மதிக்கவேண்டும்? ஆகவேதான் இந்தச் சிங்களப் பேரினவாதிகளிடம் எதையுமே எதிர்பார்க்காது தமிழர்கள் தனித் தமிழீழத்தைக் கட்டியெழுப்பியுள்ளனர். நீதித்துறை, காவல் துறை, மனித உரிமைச் செயலகம் என அனைத்தையுமே திறம்படச் செயற்படுத்தி வருகின்றனர். இந்தச் செயற்பாடுகளை வெளிநாட்டு முன்னாள் நீதிபதியே பாராட்டியுள்ளார். இதைச் சிலர் இன்னமும் அறிய மறுக்கின்றனர்.

நெல்லியடி ஆரெண்கோ

அரசியற்கட்டுரை

பரணி

# தேரர்களின் நேரடி அரசியல் நுழைவும் பாரம்பரிய கட்சிகளின் எதிர்காலமும்

நேற்றைய தொடர்ச்சி.....

கொலைக்குற்றச் சாட்டில் மரணதண்டனை பெற்ற நான்காவது குற்றவாளி சோமரத்தின தேரர் ஆவார். இவர் தூக்குக் கயிற்றில் தொங்கும்பொழுது புத்தமதத்தை விட்டுவிலகி, கிறிஸ்தவராக மாறியதாக அறிவிக்கப்பட்டது. புத்தபிக்கு தூக்குத்தண்டனை பெறக்கூடாது என்பதால், இந்த அறிவிப்பு வந்ததாகக் கருதலாம்.

பண்டாரநாயக்காவின் படுகொலையை அடுத்துப் புத்த பிக்குகளின் அரசியல் செயற்பாடுகளில் ஒரு விதமான நிலை இருந்தது. ஆனால் கால ஓட்டத்தில் அது மறைந்து விட்டது என்பதே கணிப்பாகும். மொழியை முன்னிலைப்படுத்தி, பதவியைப் பிடிக்க முனைந்த அரசியல் வாதிகளுக்கு அடுத்து ஏதோ ஒன்று தேவைப்பட்டது. அதுதான் புத்த மதத்திற்கு முதலிடம் கொடுப்பது என்பதாக அமைகிறது. இதன் மூலம் புத்த பிக்குகளுக்கு முதலிடம் மீண்டும் வழங்க இடம் கொடுக்கப்பட்டது.

பண்டாரநாயக்காவினால் 1958 ஆம் ஆண்டு தமிழ்மொழி விசேட சரத்துக்கள் சட்ட மூலம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தது. இதற்குச் செயல்வடிவம் கொடுப்பதற்காக 1966இல் சில சட்ட விதிகள் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டன. இதனை எதிர்த்துச் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இடதுசாரிக் கட்சிகள் தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன தோசை, வடை, நல்லெண்ணெய் என்று கூக்குரலுடன் இனவாதத்தைக் கக்கின. தமிழ் மக்களுக்குச் சிறு சலுகை கூடக் கொடுக்கக் கூடாதென்று குரல் எழுப்பிய இடதுசாரிகள், தமிழ் இனத்துக்கெதிராக தமது தொழிற்சங்கங்களை வேலை நிறுத்தத்திலும் ஈடுபடுத்தினர். அதே நேரம் - புத்தபிக்குகளையும் உசார் கொடுத்து மீண்டும் அவர்களை வைத்து ஆட்சியைப் பிடிக்கத் திட்டம் போட்டனர். இந்தச் சட்ட மூலத்துக்கெதிரான ஊர்வலம் கலவரத்தில் ஈடுபட்டாலும், அரசுக் காவல்துறையினர் கூட்டத்தில் புத்தபிக்கு ஒருவர் கொல்லப்பட்டதும், அதை வைத்து அரசியல் நடத்தியதும் சிறிலங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சிகளின் வரலாறாகும்.

இதனைத் தொடர்ந்த மாவட்ட சபைகள் வராது தடுப்பதிலும் புத்தபிக்குகளை அரசியல் கட்சிகள் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

இவற்றையடுத்து 1970 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் புதிய அரசியல் சாசனம் தயாரிப்பதற்கு மக்கள் ஆணையைச்சிறிமாவோபண்டாரநாயக்கா முன்வைத்து, புத்தபிக்குகளின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்தார். அவரது இடதுசாரிகளுடன் இணைந்த அரசானது- புதிய அரசியல் யாப்பில் தமிழ்மொழி முற்றாகப் புறக்கணிக்கப்பட்டதுடன், சிங்களம் மட்டும் என்பது 21வது அரசியல் யாப்பு மூலம் வலியுறுத்தப்பட்டது. அத்துடன் பௌத்த மதத்திற்கு முதன்மையான இடம் எனவும் - அதனைப் பேணிப் பாதுகாத்து வளர்ப்பது அரசின் கடமை எனவும் அரசியல் யாப்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் ஜே.ஆர். ஜெயவர்த்தனா 1978 இல் கொண்டு வந்த அரசியல் யாப்பின் மூலம் பௌத்தத்தை அரச மதமாக வெளிப்படுத்தி, உயர்வான இடத்தை அதற்குக் கொடுத்திருந்தார்.

சிங்களக் கட்சிகள் அனைத்தும் புத்தபிக்குகளின் ஆதரவை பெறுவதற்காக புத்தமதத்திற்கு உயர்ந்த இடத்தைக் கொடுத்து வந்தனர். இதற்கு மதம் மக்களுக்கு அபின் போன்றது என்ற மார்க்சின் கொள்கையைக் கொண்ட இடதுசாரிகளும் விலக்கல்ல.

ஆட்சிக்கு வரப் புத்தபிக்குகளைப் பயன்படுத்தியவர்கள் அவர்களது ஆட்சியை முதலில் வேண்டிக் கொள்வதிலும், நாட்டு மக்களுக்கான உரைகளைத் தலதா மாளிகையின் எண்கோண மண்டபத்திலிருந்து ஆற்றுவது, நாட்டின் முக்கிய பிரச்சினைகளில் புத்த பீடங்களின் ஆலோசனைகளைக் கேட்பதும், அவர்களது கருத்துக்கு மாறாக நடக்கமாட்டோமென உறுதி வழங்குவது, குறிப்பாகத் தமிழினம் சம்பந்தப்பட்ட எதனையும் தீர்மானிப்பது புத்தபீடங்களே என்ற முடிவைச் செயற்படுத்துவதில் சிங்கள ஆட்சியாளர்கள் என்றும் பின்நிற்பதில்லை. ஆனால் ஜே.வி.பி. தொடக்கத்தில் இந்த நிலைப்பாட்டை எடுக்கவில்லை. அதனால் தான் தலதா மாளிகைக்கு குண்டு வைத்தனர். ஆனால் நாளடைவில் அவர்களும் த்ங்களை மாற்றிக்கொண்டு விட்டனர். இவ்வாறு மாறியவர்கள் இதர சிங்களக் கட்சிகளிலும் பார்க்க, தாமே சிங்கள - பௌத்தத்தின் உண்மையான காவலர்கள் எனவும் காட்ட முனைந்துள்ளனர்.

இவ்வாறு சிங்களப் பாரம்பரியக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் புத்தபிக்குகளின் தயவைத் தேடியதும், இடதுசாரிகள் அதை விரும்பியதையும் தொடர்ந்து, பின்னர் வந்த ஜே.வி.பியும் புத்தபிக்குகளை வைத்து அரசியல் பிழைப்பு நடத்தத் தொடங்கியது. இந்த நிலைமை புத்தபிக்குகளின் மனதில் புதிய எண்ணங்களைத் தோற்றுவித்தது எனலாம். மற்றவர்கள் தாங்கள் பதவிகளில் ஏறுவதற்காக எம்மைக் கருவியாகப் பயன்படுத்துகின்றனர். நாம் அதற்குத் துணைபோகிறோம். அவ்வாறு துணைபோவதிலும் பார்க்க, நாமே பதவிகளில் இருந்தால் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டது. இது தவறான எண்ணமல்ல. யதார்த்தமான சிந்தனை.

ஊர்வலங்கள், எதிர்ப்புகள், நடை பயணங்கள் என்று திரிந்து மக்களைத் திருப்பி நாம் பாடுபட ஆட்சியில் எமது வியர்வையில் வேறு ஆட்கள் அமரலாமா என்று சிந்தித்தார்கள். அதன் விளைவாக நாடாளுமன்றத்திற்குள் பிக்குகள் தனிக் கட்சியாக நுழைந்துள்ளனர். இந்த நுழைவானது பிரதமர் பதவி, ஜனாதிபதி பதவியை நோக்கிப் பயணமாகத் திரும்பியுள்ளது. இறைபேத, மதவாதப் பிரச்சினையை முன்வைத்தால் எளிதில் இதனை அடைந்துவிடலாம் என்பதால், பொதுக்கட்டமைப்பை தற்பொழுது உடனடி ஆயுதமாக எடுத்துள்ளனர்.

பொதுக் கட்டமைப்பில் ஒப்பமிடக்கூடாது என்று மகா நாயக்கர்கள் ஜனாதிபதிக்கு உத்தரவிடும் நிலைக்கு ஆட்சியாளர்கள் தம்மை கீழிறக்கியுள்ளனர். உத்தரவிடும் உயர்நிலைக்குப் பிக்குகள் உயர்ந்துள்ளனர். ஆட்சிபீடத்தை விட சங்கமே உயர்வானது. ஆகையால் எமது உத்தரவை மீறினால் இதனைத் தடுப்பதற்கு சங்க ஆணை வெளியிடப்படும் என்று எச்சரித்துள்ளனர். ஆட்சியாளர்கள் சங்கங்களின் கருத்துக்களிலேயே ஆட்சி செய்யவேண்டும் என்று தெரிவித்துள்ளனர். இதன் மூலம் தமது அதிகாரத்தையும் தெளிவுபடுத்தியுள்ளனர்.

இது ஆளும் தரப்புக்குத் தர்மசங்கடமான நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. இரு பெரும் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இவ்வாதிப்புக்கள் எச்சரிக்கையாக அமைந்துள்ளன. இவ்வாறு எச்சரிக்கை விடும் புத்த சங்கங்கள் அடுத்து வரும் தேர்தல்களில் இவ்விரு கட்சிகளை ஆதரிக்க முன்வராத நிலையில், அக்கட்சிகளின் ஆட்சிப்பீட ஆசைக்குப் பேரிடியாகவும் இருக்கப்போகின்றன. ஆட்சியைப் பிடிக்கும் நோக்கத்தைக் கொண்ட திட்டங்களையே அவர்கள் முன்னெடுப்பார்கள்.

புத்தரின் ஆட்சி, சங்கத்தின் ஆட்சி ஏற்பட்டால் மாத்திரமே இலங்கை புனித பூமியாக, சிங்கள பூமியாக, பௌத்த பூமியாக இருக்க முடியும். இதற்கு பண்டார நாயக்கா வழிவந்தவர்களாலேயோ, சேனநாயக்கா, ஜே.ஆர். வழிவந்தவர்களாலேயோ முடியாது. புத்தபிக்குகளை ஆட்சியில் அமரவைக்க வேண்டியது உண்மையான சிங்கள, பௌத்த மக்களின் கடமை என்று கூறுவார்கள். மக்கள் இதை நம்பி அவர்களை ஏற்பார்களேயானால், ஆபத்துப் பாரம்பரியம் சிங்களக் கட்சிகளுக்கேயாகும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை பிக்குகள் ஆண்டாலென்ன, பிக்குகளைக்கேட்டுஆண்டாலென்ன, சிங்கள, பௌத்த மேலாண்மைக்கு எதிரான போராட்டம் தொடரும்.

ஆனால் உலகம் நியாயங்களைப் புரிந்து கொள்ளும். இலங்கைத் தீவில் தமிழினம், சிங்கள மக்களுடன் இணைந்து வாழ முடியாது என்ற உண்மையை உலகம் உணரும் காலம் வந்து கொண்டிருக்கிறது என்று நம்பலாம்.

அதனால் விடுதலையும் விரைந்து கொண்டிருக்கிறது என்று மகிழ்வோம். அதற்காக ஒற்றுமையுணர்வுடன் இருப்போம்.

உளவியல்....

ஆர்.கே.மேனன்

# பிரஜைகள் ஒவ்வொருவரையும் ஆட்கொள்ளும் மனஅழுத்தம்

**மன அழுத்தத்தை எப்படிக் குறைப்பது?**

இன்றைய எமது சமூகத்தில் உள்ள பிரஜைகள் பற்றி மேற்கொள்ளப்பட்ட தொடர் உளவியல் ஆய்வுகளின் மூலம் பலரிடத்தில் ஒருவகை மன அழுத்தம் ஏற்பட்டுள்ளது என்பது தெரிய வந்துள்ளது. இந்த மன அழுத்தத்துக்கு முக்கிய காரணம் - திட்டமிடலற்ற செயற்பாடுகளே என்று உளவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு போகின்ற உலக முன்னேற்றத்தோடு, போராட வேண்டிய தேவை எமது சமூகத்து ஆளணி வர்க்கத்துக்கு இன்றியமையாததொன்றாகிவிட்டது. இதனால் பொருளாதாரம், கல்வி, சமூக அந்தஸ்து போன்ற பல விடயங்களில் முன்னேற முனைகின்றோம்.

இதனால் ஒவ்வொருவருக்குமான வேலைப் பழுக்கள் அதிகரிக்கின்றன. பொருளாதாரத் தேவைக்கான தொழில், தொழில் முன்னேற்றத்துக்கான மேற்படிப்பு, இது முடிந்து வீடு வந்ததும், வீட்டு வேலைகள், குடும்பமாயின் பிள்ளைகளின் முன்னேற்றத்துக்கான செயற்பாடு, காலை விடிந்ததும் மீண்டும் எதிர்நீச்சல், இதனால் தான் அதிகரிக்கிறது வேலைப் பழுக்கள். இப்படியாக நடைபோட்டுக் கொண்டு இருந்தால் மாத்திரமே, உலக ஓட்டத்தோடு நாமும் ஓட முடியும் என்றாகிவிட்டது.

இப்படிப்பட்ட நெருக்கீடுகள் செயற்பாட்டு ரீதியாக அதிகரிக்கின்றபோது, வேலைகளை எப்படி முடிப்பது, எப்படிச் செயற்படுத்துவது, எப்படி வெற்றிபெறுவது என்ற ஒரு வகை அழுத்தங்கள் மனநிலையைத் தாக்க ஆரம்பிக்கிறது. இதுவே மன அழுத்தமெனும் நோய்க்கு வித்திடுகிறது.

**மன அழுத்தங்களால் வருகின்ற எதிர் விளைவுகள்**

எமக்கே தெரியாது உருவாகும் ஒருவகை நோயாகிய இந்த மன அழுத்தத்தால் பல எதிர் விளைவுகள் ஏற்படுகின்றன. புன்னகை என்பது முகத்தில் தோன்றாத நிலை உருவாகும். கிடைத்தற்கரிய இந்த மனித வர்க்கத்தின் சிறப்பே இந்தப் புன்னகைதான். பிறந்தோம், வாழ்ந்தோம் என்பதில் அர்த்தமான விடயம். நாலு பேரோடு சந்தோசமாக இருந்த வரலாறுகள்தான். இதை இழந்தோமாயின் எமது வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேட நாமே ஒரு காலத்தில் அவஸ்தைப் படுவோம்.

இவற்றைவிட அடுத்தவரோடு எதற்கெடுத்தாலும் சினக்கின்ற தன்மை, சாதாரணமாக வஞ்சகமில்லாமல் பிறர் சொன்ன



வார்த்தைகள் எல்லாம் பிழையாகத் தெரிதல், சிறிய விடயங்களுக்குக் கூட பதற்றப்படுதல் போன்ற பல எதிர்ச் செயற்பாடுகள் இந்த மன அழுத்தத்தால் உருவாகும். இவற்றைவிட இரத்தக் கொதிப்பு, சலரோகம், வேறு பல மன நோய்கள் ஏற்பட வாய்ப்பும் உண்டாகும். இதனால் எமது முன்னேற்றத்துக்காக அதிகமாக உழைத்தும் கூட பிரதி விளைவுகளையே எதிர் நோக்க வேண்டியேற்படும். ஆகவே இப்படிப்பட்ட மன அழுத்தங்களிலிருந்து விடுபட வேண்டுமாயின், எமது வாழ்க்கையில் திட்டமிடல்கள் என்பது இருக்க வேண்டும்.

**மன அழுத்தத்திலிருந்து எப்படி விடுபடுவது?**

எமது சாதாரண நடத்தைக் கோலங்களில் இடம்பெறுகின்ற ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் திட்டமிடல் இருக்க வேண்டும்.


இரவு வீடு வந்ததும் மறுநாள் செயற்பாடுகளைத் திட்டமிட்டு குறிப்பெடுக்க வேண்டும். பின்பு தனித்தனியாக ஒவ்வொரு வேலைக்கும் திட்டமிட வேண்டும். திட்டமிடலானது மாறுபடும்போது, அந்தக் கணப்பொழுதில் அதனைச் சீர்செய்து திட்டமிட வேண்டும்.

இவ்வாறான திட்டமிடற் கூடாக எமது செயற்பாட்டை வழிநடத்தும்போது அதிகளவு செயற்பாட்டு வெளியீட்டையும் பெறமுடியும். அத்தோடு நிதானமான முறையில் செயற்பாடாற்றவும் முடியும். இதனை நடைமுறைப்படுத்தும் போது நீங்களாவே உணர்ந்து கொள்வீர்கள். எந்த அளவிற்கு மன நிறைவான செயற்பாடு என்பதையும், மன அழுத்தங்களற்ற, முரண்பாடற்ற செயற்பாடென்பதையும் -

இந்தத் திட்டமிடலை விட, யோகாசன தியானப் பயிற்சியும், இந்த மன அழுத்தத்தைக் குறைக்கும். அதாவது -பல்வேறு சிந்தனைகளில் அங்கலாய்க்கும் எமது மனதை ஒரு நிலைப்படுத்தி, ஒரு குறிப்பிட்ட கணப்பொழுதாவது ஒரே சிந்தனையில் இருக்க வைத்தல் மூலம், இந்த மன அழுத்தத்தைக் குறைக்கலாம். ஆகவே அதிகரித்துவரும் இந்த மன அழுத்தநோயைக் குறைத்து, அகில ஓட்டத்தில் நாமும் ஓடத் தயாராவோம்.

# சதாம் மீதான விசாரணைகள் இந்த வருடம் முடிவடையுமாம்

## ஈராக்கிய சட்ட அமைச்சர் தெரிவிப்பு



புருசெல்ஸ் —

ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் ஆட்சி அகற்றப்பட்டு அங்கு புதிய ஆட்சி நடைபெற்று வருகின்றது. அமெரிக்கப்படையினரால் கைது செய்யப்பட்ட சதாம் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவர் மீது 500க்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் பட்டுள்ளன.

இந்த வழக்கு விசாரணை அடுத்த மாதம் தொடங்கவுள்ளது. பல்வேறு நாடுகளிலிருந்தும் சட்டத்தரணிகள் அவருக்காக ஆஜராகவுள்ளனர்.

இந்த நிலையில் ஈராக் சட்ட அமைச்சர் அப்துல் ஹுசைன் சந்தால் பெல்ஜியம் நாட்டின் புருசெல்ஸ் நகரில் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது -

சதாம் மீதான வழக்குகள் ஈராக் நீதிமன்றிலேயே நடக்கும். சர்வதேச நீதிமன்றில் விசாரிக்கத் தேவையில்லை. சதாம் தனது ஆட்சிக் காலத்தில் நடத்திய படுகொலைகள், சித்திரவதைகள் தொடர்பான வழக்குகள் அடுத்த மாதம் தொடங்கும். இந்த வழக்கு விசாரணை இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவடைந்துவிடும். தீர்ப்பும் வழங்கப்பட்டு விடும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, சதாம் மீதான புகார்கள் குறித்து அவரிடம் தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது. அவர் மீது வழக்குப் பதிவு செய்து நீதிமன்றில் விசாரணை தொடங்குவதில் தாமதம் ஏற்படும் என்று பிரதமர் இப்ராகிம் அல் ஜபாரி ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

இதற்கிடையே சதாமின் சட்டத்தரணிகளில் ஒருவரான ஜியோவானிஸ்டிபானோ ரோம் நகரில் கூறும்போது - சதாமைத் தற்போது காவலில் வைத்திருப்பது சட்டவிரோதம். அவருக்கு முறைப்படி கைதுஉத்தரவு அனுப்பப்படவில்லை. அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் என்ன என்பதும் முறைப்படி தெரிவிக்கப்படவில்லை. அவரை காவலில் தொடர்ந்து வைத்திருப்பது மனித உரிமையை மீறும் செயல் எனவும் தெரிவித்துள்ளார்.

# ரஷ்யா அனுப்பிய ரொக்கட் விழுந்து நொருங்கியது

ராணுவ தகவல் தொடர்புக்காக செயற்கை கோளு டன் கூடிய ரொக்கெட்டை ரஷ்யா நேற்று முன்தினம் ஏவியது. ஆனால் அந்த ரொக்கெட் ஏவப்பட்ட சிறிது நேரத்திலேயே வெடித்துச் சிதறி மேற்கு சைபீரியாவில் விழுந்தது. இந்த இடம் ஆள் நடமாட் டம் இல்லாத பகுதியானதால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

ரொக்கெட்டை இயக்கக்கூடிய இயந்திரம் சரியாக செயற்படாததால் இந்தச் சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது. நொருங்கிய ராக்கெட் பாகங்களை மீட்க இராணுவத்தினர் ஹெலிகொப்டரில் சென்று தேடுதல் நடவடிக்கையை மேற் கொண்டுள்ளனர்.

உலக நோக்கு

# பலஸ்தீன நிலை குறித்து ஷரோன், அப்பாஸ் பேச்சு!

பலஸ்தீனத் தலைவர் மக்மூத் அபாஸுடன் இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் நேற்றுமுன்தினம் பேச்சு நடத்தினார்.

யூதர்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்களின் புனித நகரமாகக் கருதப்படும் ஜெருசலேம் தங்களுக்கே சொந்தம். அது தங்கள் தலைநகர் என்று இஸ்ரேலும், பலஸ்தீனமும் உரிமை கொண்டாடுகின்றன.

இதைத் தொடர்ந்து ஜெருசலேம் நகரில் வன்முறைக் கலவரங்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன. நீண்ட காலமாக நடந்து வரும் இந்த மேற்கு ஆசியா பிரச்சினையில் அமெரிக்கா தலையிட்டு சமரச முயற்சியில் ஈடுபட்டது. இதையடுத்து கடந்த 4 மாதங்களுக்கு முன்பு அங்கு போர் நிறுத்தம் ஏற்பட்டது.


இதைத் தொடர்ந்து காசாவிலிருந்து இஸ்ரேல் தனது படைகளை வாபஸ் பெற்றது. ஆனால் கடந்த திங்கட்கிழமை போர் நிறுத்தம் மீறப்பட்டது.

இந்த நிகழ்ச்சி திட்டமிட்ட சதி. காசாவிலிருந்து இராணுவம் வெளியேறுவதைத் தடுக்க நடந்த முயற்சி என்று அமெரிக்க வெளியுறவுச் செயலர் கொண்டோலிசா ரைஸ் தெரிவித்தார்.

இந்த நிலையில் இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் பலஸ்தீன தலைவர் மக்மூத் அபாஸும் நேற்றுமுன்தினம் ஜெருசலேமில் சந்தித்துப் பேசினார்கள். ஏரியல் ஷரோன் வீட்டில் இந்தச் சந்திப்பு நடந்தது. காசா பகுதியிலிருந்து ராணுவம் வெளியேறுவது தொடர்பாகவும், கிளர்ச்சிவாதிகளின் தாக்குதல் தடுத்து நிறுத்தப்படவேண்டும் என்றும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

## மீனவரைப் பாதுகாக்கவெனத் தெரிவித்து

# தாய்வான் போர்க்கப்பல்கள் சீன கடல் பகுதிக்கு விரைந்தன!



தைபே —

சீன கடல் பகுதியை அடுத்துள்ள டயூதாப் கடல் பகுதி யாருக்கு என்பதில் சீனா, ஜப்பான், தாய் வான் ஆகிய நாடுகளுக்கிடையே தகராறு இருந்து வருகிறது.

இந்தப் பகுதியில் மீன்பிடிப்பது தொடர்பாக வும் 3 நாடுகளைச் சேர்ந்த மீனவர்களுக்கிடையே சர்ச்சை நிலவி வருகிறது.

இந்தநிலையில், சமீபகாலமாக தாய்வான் நாட்டு மீனவர்களை ஜப்பான் கடற்படை வீரர்கள் துன்புறுத்துவதாகவும், அவர்களது படகுகளை யும், மீன் களையும் பறிமுதல் செய்துவிட்டு அவர் களை அடித்து உதைத்து அனுப்புவதாகவும் புகார் கள் எழுந்துள்ளன.

இதனால் சர்ச்சைக்குரிய அந்தக் கடல் பகுதிக்கு தாய்வான் தனது 2 போர்க் கப்பல்களை அனுப்பி வைத்துள்ளது. இந்தப் போர்க் கப்பல்களில் நீண்ட தூரம் பறந்து சென்று கப்பல்களைத் தாக்கும் ஏவுகணைகளும் பொருத்தப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியில் இது பெரும் பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. அந்தப் பகுதிக்கு ஜப்பான் இதுவரை தனது போர்க் கப்பலையோ, விமானங்களையோ அனுப்பிவைக்கவில்லை என்றாலும் தாய்வா னின் இந்த நடவடிக்கை ஜப்பான் - தாய் வான் இடையேயான உறவைப் பாதிக்கலாம் என்று சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# மரண அறிவித்தல்



## திருமதி அந்தோனிப்பிள்ளை றோசறி மரியம்மா (றோசலீன்)

திருமதி அந்தோனிப்பிள்ளை றோசறி மரியம்மா அவர்கள் 16.06.2005 வியாழக்கிழமை இந்தியாவில் சென்னையில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சுவக்கீன் அந்தோனிப்பிள்ளையின் மனைவியும், காலஞ்சென்றவர்களான பிரான்சீஸ் சிசிலியாவின் மூத்த மகளும், காலஞ்சென்ற வேதநாயகம் பிலோமினா (நல்லம்மா) வின் சகோதரியும், செபஸ்ரியன் (அன்ரன்), மொணிக்கம் றீசா (மொணிக்கா), அவலின் பொதினார் (எட்மன்ட்), மாசில் அன்டொயினட் (வவி), பவுஸ்ரினுஸ் வேதானந்தம் (சந்திரபோஸ்), டொன்பொய்கா (வெனிற்றா), யோசப் பவுஸ்ரி (யோடின்), ஸ்கொலா பெனடிக்றா (றொபினா), அருட்திரு பிரான்சீஸ் லொசிங்ரன் O.M.I ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற மரிஸ்ரெலா (தவமணி), மரியதாஸன் ஸ்ரனிஸ்லஸ் (நேசராசா), சபினா, கந்தசாமி, மதுரா, இக்னேசியஸ் பாலசிங்கம், மொயிறா (ஜயந்தா), அன்ரனி வசீகரன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

இவரின் இறுதிக் கிரியைகள் இந்தியாவில், சென்னை தோமஸ் மவுண்ட் சேமக்காலையில் இன்று 23.06.2005 வியாழக்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

215, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
அ.செபஸ்ரின் (அன்ரன்)

(1956)

## கார்கில் போரில் இந்தியாவைத் தாக்க

# அணுஆயுதம் பொருத்திய ஏவுகணையை பாகிஸ்தான் தயாரித்ததாக புதுத்தகவல்

கார்கில் போரின் போது இந்தியாவை தாக்க அணு ஆயுதம் பெருத்திய ஏவுகணையை பாகிஸ்தான் ராணுவம் தயாரித்ததாக திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது.

பாகிஸ்தான் பிரபல எழுத்தாளர் ஹிசைன் ஹக்கானி - 'மசூதிக்கும் ராணுவத்துக்குமிடையே பாகிஸ்தான்' என்ற புத்தகத்தை எழுதியுள்ளார். அமெரிக்காவில் இப்புத்தகம் விரைவில் வெளியிடப்படவுள்ளது. கார்கில் பேரின்போது அமெரிக்காவின் அப்போதைய ஜனாதிபதி கிளின்டனும், பாகிஸ்தானின் அப்போதைய பிரதமர் நவாஸ் ஷெரிப்பும் வொஷிங்டனில் நடத்திய பேச்சின் விபரம் புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கார்கில் சண்டையில் இந்தியாவை தாக்க அணுவாயுதம் பெருத்திய ஏவுகணை உங்கள் நாட்டு இராணுவம் தயாரித்துக் கொண்டிருப்பது உங்களுக்கு தெரியுமா? என்று சந்திப்பின்போது ஷெரீப்பிடம் கிளின்டன் கேட்டுள்ளார். அதைக் கேட்டதும் ஷெரீப் இந்தியா அப்படி செய்து கொண்டிருக்கலாம் என்று திணறலுடன் பதிலளித்தார்.

இந்தச் சந்திப்பின்போது கிளின்டனின் சிறப்பு உதவியாளர் புருஸ் ரீடெல்லும் இருந்துள்ளார். பேச்சின் விபரத்தை அவர் கூறியதாக தனது புத்தகத்தில் ஹிசைன் ஹக்கானி தெரிவித்துள்ளார்.

# தென்மராட்சி வலய பாடசாலைகளின் தமிழ் மொழித்தின போட்டி முடிவுகள்

தென்மராட்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையேயான 2005ஆம் ஆண்டு தமிழ்த்தின போட்டி முடிவுகள் வருமாறு

**ஆக்கம் எழுத்து (பிரிவு 1)**

1 ஆம் இடம் - த.செந்தாளன் (சாவகச் சேரி இந்து ஆரம்ப பாடசாலை), 2 ஆம் இடம் - நா. கோதண்யா (மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்), 3 ஆம் இடம் - பே.சங்கீதா (நுணாவில் கிழக்கு அமிர் தாம்பிகை வித்தியாலயம்).

**கட்டுரை வரைதல்,**
**கடிதம் எழுதுதல் (பிரிவு 2)**

1 ஆம் இடம் - செ.சாருகா (மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்), 2 ஆம் இடம் - த.அற்சயா (மீசாலை வீரசிங்கம்), 3 ஆம் இடம் - க.கஸ்தூரியா (விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்).

**கட்டுரை வரைதல்,**
**கடிதம் எழுதுதல். (பிரிவு 3)**

1 ஆம் இடம் - இ.நிரோஜா (மட்டுவில் சந்திர மௌலி வித்தியாலயம்), 2 ஆம் இடம் - வெ. தேவிகா (மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்), 3 ஆம் இடம் - க.மைதிலி (கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்).

**கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல் (பிரிவு 4)**

1 ஆம் இடம் - ப.சர்வசொரூபி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம் - ச.தர்சனா (கொடிகாமம் அ.த.க பாட சாலை), 3 ஆம் இடம் - யோ.கஜேந்தினி (மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்).

**தமிழியற் கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல் (பிரிவு 5)**

1 ஆம் இடம் - பி.எட்வின் நிகேதன் (உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்), 2 ஆம் இடம் - சு.வினோஜா (மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்).

**இலக்கணப் போட்டி (பிரிவு 4)**

1 ஆம் இடம் - க.நிசாந்தன் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), 2 ஆம் இடம் - க.மயூரி (மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்), 3 ஆம் இடம் - ந.பகீரதன் (மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்).

(தொடரும்) (29)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கு தனித்தரப்பு வழங்கப்படமாட்டாது!

மட்டக்களப்பு —

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்படவிருக்கும் பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்குத் தனித்தரப்பு கிடைக்கக்கூடிய வாய்ப்பில்லையென்று நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் மீண்டும் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பும் வழியில் கல்முனைக்கு ஹெல்கிசன் பயணம் மேற்கொண்டார். இந்தப் பயணத்தை மேற்கொண்ட அவருடன் நோர்வேத் தூது

## கல்முனையில் ஹெல்கிசன் தெரிவிப்பு

வர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் சென்றார்.

அங்கு அவர் அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன பிரதிநிதிகளுடன் நடந்த சந்திப்பில் பொதுக்கட்டமைப்பு தொடர்பாகவும் அதில் முஸ்லிம் களின் நிலைமை குறித்தும் கலந்துரையாடினார்.

முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் மற்றும் இழப்புக்கள் பற்றி எடுத்துக்கூறிய முஸ்லிம் பிரதிநிதிகள்- பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கும் தனித்தரப்பு வழங்கப்பட்டு அதில் கையொப்பமிடுவதற்கான அந்தஸ்து வழங்கப்படுவதன் மூலமே தங்களுக்குரிய அதிகாரம் உறுதிப்படுத்தப்படும் என்ற கருத்தை வலியுறுத்தினர்.

அதற்குப் பதிலளித்த நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் - அரசாங்கத் தரப்பில் முஸ்லிம்களுக்கு இடமளிக்கப்பட்டுள்ளதால் அதற்குரிய வாய்ப்பில்லை என்று தெரிவித்தார்

மேலும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தில் முஸ்லிம்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள். எனவே, அரசாங்கத்தினூடாக முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்படுகின்றது என்று சுட்டிக்காட்டியதோடு முஸ்லிம்கள் ஒற்றுமையுடன் செயற்படவேண்டியதன் அவசியம் பற்றியும் வலியுறுத்தினார்.

## ஜனாதிபதி வேட்பாளர்...

பதற்கு விருப்பம் தெரிவித்திருப்பதாகவும் அந்த சிரேஷ்ட உறுப்பினர் கூறினார்.

பொதுஜன ஐக்கிய மக்கள் முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் அறியத் தருவதாக ஜனாதிபதி சில தினங்களுக்கு முன்னர் பிரதமரிடம் தெரிவித்திருந்தார். அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் என பிரதமர் ஜனாதிபதியிடம் வினவியபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷவை நியமிப்பதற்கான போராட்டத்தை துறைமுக அபிவிருத்தியமைச்சர் மங்கள சமரவீர ஏற்றிருப்பதாகவும் தெரியவருகிறது.

அத்துடன் அடுத்த பிரதமராக அனுரா பண்டாரநாயக்கவை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பையும் மங்கள சமரவீரவே ஏற்றிருப்பதாகவும் அத்தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தங்களின் தலைவராக பிரதமர் மஹிந்த ராஜபக்சவை நியமிக்குமாறு சீன விஜயத்திற்கு முன்னர் இடம்பெற்ற கட்சிக் கூட்டத்தின்போது மங்கள சமரவீர வேண்டுகோள் விடுத்திருந்ததாகவும் அதேபோல அடுத்த கட்சிக் கூட்டத்தின்போது அனுரா பண்டாரநாயக்கவை அடுத்த பிரதமராக நியமிக்குமாறு வேண்டுகோள் விடுக்க அவர் தீர்மானித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

## பொதுக்கட்டமைப்பை...

கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்துறை நடுவப் பணியகத்தில் மதியம் 12 மணியளவில் யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் சம்மேளனத் தலைவர் தவரட்ணத்தால் இந்த மகஜர் கையளிக்கப்பட்டது.

இதேவேளை - ஐக்கிய நாடு[illegible] செயலாளர் நாயகம் கொபி அனான், ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் ஆகியோருக்கான மகஜர்களும் ஹான்ஸ் பிரட்ஸ்கரிடம் கையளிக்கப்பட்டன.

இந்த மகஜர்களை உரியவர்களுக்கு சமர்ப்பிப்பதாக அவர் தெரிவித்தார். இந்த மகஜர் கையளிப்பு வைபவத்தில் வடக்கு - கிழக்கு மாகாண கடற்தொழிலாளர் சங்க பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## பொலிஸ்...

நகருக்குச் சென்றுகொண்டிருந்த போது - தண்ணீர் தாங்கிச் சந்தியில் இந்தத் தாக்கு தல் இடம்பெற்றுள்ளது.

சைக்கிள் ஒன்றில் வந்த இனந்தெரியாத துப்பாக்கிதாரி இவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச்சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மேல்மாகாண முதலமைச்சராக...

நந்தன மென்டிஸ் முதலமைச்சராககும் வாய்ப்பைப் பெற்றுள்ளார்.

இது குறித்து கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த ஜே.வி.பியின் மேல் மாகாண சபை உறுப்பினர் வருண தீப்த ராஜபக்ஷ - -

நாம் புதிய முதலமைச்சருடன் நீண்ட கலந்துரையாடலை நடத்தியுள்ளோம். இதன்மூலம் அவருக்கு ஒரு வருடத்துக்கான ஆதரவை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளோம். இதுகுறித்து அவருடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது. இந்த உடன்படிக்கை மீறப்படுமாக இருந்தால் ஜே.வி.பி. எந்தவேளையிலும் தனது ஆதரவை விலக்கும் எனத் தெரிவித்தார்.

## ஹர்த்தாலைக் குழப்ப...

ஊரடங்கு உத்தரவு பொலிஸாரால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் சேருநுவர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். கலவர வேளையில் அங்கு வந்த பொலிஸார் எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்து கலவரத்தைக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தனர்.

இதனையடுத்து பொலிஸார் அந்தப் பகுதியில் தீவிர ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதுடன் ஊரடங்கு உத்தரவினையும் பிறப்பித்துள்ளனர்.

இதேவேளை தெய்வத்தை சோமபுர பகுதிகளைச் சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட சிங்கள மக்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

இவற்றினால் அச்சம் கொண்ட குமரபுரம், தங்கபுரம், அரிப்பு 58 ஆம் கொலனி, 6 ஆம் கொலனி, பெருவெளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி கிளிவெட்டிப் பாடசாலையிலும், அண்மித்த ஆலயங்கள் மற்றும் தேவாலயங்கள் என்பவற்றில் தஞ்சமடைந்துள்ளனர்.

# ஜனாதிபதியின் விசேட செய்தி...

ஹெல்கிசன் தலைமையிலான குழுவினரை விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் வரவேற்றார். இதன் பின்னர் அரசியற்துறை நடுவப் பணியகத்தில் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினருக்கும் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தலைமையிலான குழுவினருக்கும் இடையில் சுமார் ஒன்றரை மணிநேரம் பேச்சுக்கள் இடம்பெற்றன. இந்தச் சந்திப்பின் பின்னர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தெரிவித்ததாவது -

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹெல்கிசன் தலைமையிலான குழுவினருடன் இன்று இடம்பெற்ற சந்திப்பில் - இன்றைய நிலைமைகள் பற்றி அதிகநேரம் பேசப்பட்டது. வழமையான சந்திப்புப் போன்றே இன்றைய சந்திப்பும் அமைந்தது. பெரிய மாற்றங்கள், திருப்பங்கள் எதுவும் இடம்பெறவில்லை. ஏனெனில், வழமைபோலவே ஜனாதிபதியின் வாக்குறுதிகளை மட்டும் எடுத்துவந்தவர்களாக நோர்வே குழுவினர் இருந்தார்களே தவிர, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதையும் முன்னெடுக்கக் கூடியதாக இந்தச் சந்திப்பு அமையவில்லை.

இந்தச் சந்திப்பில் தற்போதுள்ள கள நிலைவரம் பற்றியே நோர்வே தரப்புக்கு விளக்கியுள்ளோம். தற்போது யுத்தநிறுத்த சூழல் நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டுவிட்டது பற்றியும், இந்த அமைதி முயற்சிகளில் மக்கள் முழுமையாக நம்பிக்கையிழந்தவர்களாக வாழ்வது பற்றியும் தமிழ்மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான சூழல் பற்றியும் எடுத்துவிளக்கியுள்ளோம். தற்போதிருக்கின்ற நிலைமைகள் - அமைதி முயற்சிகளை தொடர்ந்தும் பேணமுடியாத மோசமான நிலைமைகளை உருவாக்கலாம் என்பது பற்றியும் தெளிவாக விளக்கியுள்ளோம்.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் தற்போதும் ஜனாதிபதியின் வாக்குறுதிகள் வெளிப்பட்டுக்கொண்டிருக்கிறதே தவிர, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற வகையில் பொதுக்கட்டமைப்பு தொடர்பாக உடனடியாக முடிவெடுத்து - நடைமுறைக்குக் கொண்டுவருவது பெரும் பிரச்சினைக்குரிய விடயமல்ல.

பொதுக்கட்டமைப்பை பாரிய பிரச்சினையாக்கி, அரசியல் காய்நகர்த்தலுக்குள் அதைத்தள்ளி, தங்களுடைய அரசியல் லாபங்களுக்கு பயன்படுத்தவே முயற்சிகள் இடம்பெறுகின்றன. அதைத்தான் ஜனாதிபதி செய்துகொண்டிருக்கிறார். பொதுக்கட்டமைப்புக்கு எதிரான உணர்வை சகலமட்டங்களிலும் உருவாக்குவதற்காகவே ஜனாதிபதி அதனை இழுத்தடிப்புச் செய்துவருகிறார்.

எனவே, இந்த இழுத்தடிப்பு நிலையை ஒரு முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்பது பற்றி நாங்கள் ஏற்கனவே பல தடவைகள் வலியுறுத்தியுள்ளோம். இன்றைய சந்திப்பின் போதும் ஜனாதிபதியின் இழுத்தடிக்கும் நிலைப்பாடே எமக்கும் வெ[illegible] பட்டது.

பொதுக்கட்டமைப்பைக் கொண்டு வரும்போது அதில் முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவம் தொடர்பாக ஆரம்பத்திலிருந்தே மிகவும் உறுதியாக நாம் வலியுறுத்தியுள்ளோம்.

ஆகவே, முஸ்லிம் தரப்பு மத்தியில் மட்டுமல்ல சகல தரப்பிடமும் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் ஜனாதிபதி செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறார்.

பொதுக்கட்டமைப்பை சர்ச்சைக்குரிய - மர்மமான விடயமாக்கி, பிரச்சினைகளை பெரிதாக்கி - இழுத்தடிப்புக்களை உருவாக்கி நிலைமைகளை மோசமாக்கும் வகையில் நிலைமைகள் உள்ளன. முஸ்லிம் தரப்புடன் ஒன்றும் பேசமுடியாத நிலையில் நாமும் உள்ளோம். ஏனெனில், ஜனாதிபதியின் வாக்குறுதிகளை மட்டும் வைத்துக்கொண்டு முஸ்லிம் மக்களுக்கு எந்த வாக்குறுதிகளையும் நாம் வழங்கமுடியாதுள்ளது. இதுதான் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடாக உள்ளது.

பொதுக்கட்டமைப்பில் இருதரப்பும் ஒரு நிலைப்பாட்டுக்கு வந்த பின்னர் - அதிலுள்ள கட்டமைப்பு உருவாக்கப்படும்போது முஸ்லிம் மக்களின் பாதிப்பின் அடிப்படையில் அவர்களின் பிரதிநிதித்துவம் அமையும் என்பதை ஏற்கனவே வலியுறுத்தியுள்ளோம். ஒரு நிலைப்பாடு ஏற்படும் பட்சத்தில் முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவம் தொடர்பில் உறுதியான முடிவெடுப்போம்.

பொதுக்கட்டமைப்பு தொடர்பாக வெளிவரும் செய்திகள் - தமிழ்மக்கள் மத்தியில் குழப்பத்தையும் அதிருப்தியையும் உருவாக்கியுள்ளது. இது தொடர்பாக இன்றைய சந்திப்பில் தெளிவுபடுத்தியுள்ளோம். ஏனெனில், இந்தப் பொதுக்கட்டமைப்பு - ஜனாதிபதிக்கோ, நாடாளுமன்றத்துக்கோ பதில் சொல்வதாக இருக்கப்போவதில்லை. பொதுக்கட்டமைப்பு முழுக்க முழுக்க சுதந்திரமான அமைப்பாகவும் இந்த நிதியினைக் கையாள்வது ஒரு நிதிநிறுவனத்தின் பொறுப்பிலிருக்கும் என்பதை ஏற்கனவே வலியுறுத்தியுள்ளோம். அண்மைக்காலமாக ஜனாதிபதி செய்த விமர்சனம், உரைகள் - மக்கள் மத்தியில் குழப்பத்தை உருவாக்கியுள்ளது. இதுகுறித்தும் நோர்வே தரப்பிடம் விளக்கியுள்ளோம்.

இராணுவத்தரப்பு நிழல் யுத்தம் ஒன்றை எம்மீது திணித்துள்ளது. எமது அரசியல் செயலகங்கள், போராளிகள் மீதான தாக்குதல்கள் என்பன யுத்த நிறுத்தத்தை சீர்குலைக்கின்ற செயல் என்பதையும் இன்றை சந்திப்பில் சுட்டிக்காட்டியுள்ளோம். இவற்றுக்கு உரிய பரிகாரம் தேடாவிடின் நிலைமைகள் மிக மோசமான கட்டத்தை அடையும் என்பதை எடுத்துக் கூறியுள்ளோம்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் கையில்தான் எல்லாம் உள்ளது. ஜனாதிபதிக்கு இடையூறாக இருந்தது ஜே.வி.பி.தான் என்று சொல்லப்பட்டது. இப்பொழுது ஜே.வி.பி. அரசிலிருந்து விலகியுள்ளது. எனவே, உறுதியான தீர்மானங்களை எடுத்து, உறுதியான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வது ஜனாதிபதிக்கு ஒரு பிரச்சினையான விடயமல்ல.

ஆகவே, அவர் காலத்தை இழுத்தடிப்பது பொருத்தமற்றது எனத் தெரிவித்தார் தமிழ்ச்செல்வன்.

இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் - தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரும் -

நோர்வே தரப்பில் - பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## பொதுக்கட்ட...

கிளிநொச்சி அரசியற்துறை நடுவப் பணியகத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.தொடர்ந்து அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில் -

நாம் கொழும்பில் நான்கு சந்திப்புக்களை நடத்தினோம். இந்தச் சந்திப்பில் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாகவும் எதிர்காலச்செயற்பாடுகள் தொடர்பாகவும்பேசினோம்.

எங்களுக்கு கால எல்லை கிடையாது. ஆனால், பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது. இதன் காரணமாக நாம் எமது பொறுப்பை செய்து முடிப்போம் என்ற நம்பிக்கை தற்போது ஏற்பட்டிருக்கின்றது.

இதைவிடபொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தும் விடயத்தில் இரண்டு தரப்பினரும் மிகவும் ஆர்வமாக இருக்கின்றனர். எனவே, பொதுக்கட்டமைப்பு மிக விரைவில் கைச்சாத்திடப்படுமென நான் எதிர்பார்க்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# நாடாளுமன்றம் நேற்று...

நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெறும் கட்சித்தலைவர்களின் கூட்டத்தின் பின்னர் ஜே.வி.பி உறுப்பினர்களின் ஆசன ஒதுக்கீடு பற்றி முடிவுசெய்யப்படவுள்ளதாக நாடாளுமன்ற தகவல்கள் தெரிவித்தன.

காலை நாடாளுமன்றம் கூடிய போது ஜாதிகஹெல உறுமயகட்சியின் நாடாளுமன்ற குழுத்தலைவர் அத்துரலிய ரதன தேரர் மற்றும் ஜே.வி.பியின் நாடாளுமன்ற குழுத்தலைவர் விமல் வீரவன்ச ஆகியோர் உத்தேச பொதுக்கட்டமைப்பு குறித்த தங்க ளின் நிலைப்பாடுகள் குறித்து விசேட உரை நிகழ்த்தினர்.

இங்கு உரையாற்றிய விமல் வீரவன்ச - அரசாங்கத்திற்கு வழங்கி வந்த ஆதரவை ஜே.வி.பி விலக்கிக் கொண்டுள்ளது. ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டால் மாகாண சபைகளிலும் ஆளும் கட்சியின் பலத்தை இழக்கச் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எனினும், ஜனாதிபதியின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து எமக்கு திருப்தி ஏற்படின் மீண்டும் அரசுடன் இணைந்து பணியாற்றுவதற்கான சாத்தியம் உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

(01)

# 45 ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 04 - 09 - 2002



உதிர்வு 10 - 05 - 2005

பிறப்பிடம்
7 ம் வட்டாரம், புங்குடுதீவு.

## நகுலேஸ்வரன் டயந்தன்

நாட்கள் நாற்பத்தைந்தென்ன ஆண்டுகள் பல சென்றாலும்
எங்கள் நெஞ்சை விட்டகலாத செல்வமே!
பெருஞ்சுடராய் ஒளிவீசுவாய் என்று நாம் நம்பியிருந்தோம்
ஆலவிருட்சமாய் குடும்பத்திற்கே
நிழல் தருவாய் என்றிருந்தோம்
எம் நினைவுகளெல்லாம் கனவாகிப் போனதே
அன்பு என்னும் பாசவலைப் பின்னலில் சிக்கி
எம்மைத் தவிக்க விட்டுச் சென்ற பாசமலரே
உனது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

இன்று 23.06.2005 வியாழக்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*இல. 19/1, B.A.தம்பி லேன்,*
*சிவலிங்கப்புளியடி.*
*யாழ்ப்பாணம்.*

(1957)

பிரிவால் துயருறும்
அப்பா - நகுலேஸ்வரன்
அம்மா - ரஞ்சனாமலர்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 23.06.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.